
# 'வெழ்'மணியம்



"சோழியன் குடுமி சும்மா ஆடாது" எண்டு ஒரு பழமொழி இருக்கு. அமெரிக்காவின்ர குடுமியும் அப்பிடித்தான்.

ஸ்ரீலங்காவில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைப் பாவிச்சு உள்ள பூந்து ஏதும் விளையாட்டுக் காட்டலாம் எண்டு காய் நகர்த்துகிறது அமெரிக்கா.

அண்மையில் பசில் ராஜபக்ஷவை அமெரிக்காவுக்கு கூப்பிட்டு "ஓதி" அனுப்பியிருக்கினம்.

பசில் ராஜபக்ஷவைக் கூப்பிட்டு என்ன கதைச்சவை எண்ட விபரம் இன்னும் வெளிய வரவில்லை.

சும்மா கூப்பிட்டு கதைச்சிருக்கமாட்டினம். சீனாவின் ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமா இலங்கையில் கூடிக்கொண்டு போவதை அமெரிக்கா பாத்துக்கொண்டிருக்காது.

"உங்கட நிலைப்பாடு என்ன?" எண்டு பசிலை கேட்டிருப்பினம்.

02

Follow us:

வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN WEEKLY
தமிலன் සතිඅන්තය

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

## நக்கல் நமசிவாயம்



சீப்பை ஒளிச்சா கலியாணம் நிண்டுபோகும் என்னங்கோ..
பெற்றோல் விலைய கூட்டினா எப்படி ஆக்கள் வாகனத்தில வருவினம்..?

மலர் : 01, இதழ் : 51- பிலவ வருடம், வைகாசி மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (13.06.2021) ஹிஜ்ரி - 1442, துல்கஃதா பிறை - 02, 0115886187 பக்கங்கள் 12

# கொரோனா நிலைமையை காட்டி அகதி அந்தஸ்தா? வெளிநாட்டு மோகத்தில் ஏமாந்த இலங்கை இளைஞர்கள்!

## படகில் சென்று இந்திய பொலிஸாரிடம் சிக்கிய பரிதாபம்





இலங்கையின் கொரோனா நிலைமையைக் காரணம் காட்டி வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து கோரலாமென சட்டவிரோத வெளிநாட்டு பயண முகவர்கள் கூறியதை நம்பி, இலங்கையிலிருந்து படகுகளில் கடல்வழியாக வெளிநாடு செல்ல முயன்ற இளைஞர், யுவதிகள் இடைத்தங்கலை மேற்கொண்டு இந்தியாவில் இருந்தபோது பொலிஸாரிடம் சிக்கினர். அவர்களிடம் விசாரணைகள் நடந்துவருகின்றன.

**மங்களூருவில் 38 பேர் கைது**

தட்சிண கன்னடா மாவட்டம் மங்களூரில் வெளிநாட்டு பிரஜைகள் சட்ட விரோதமாக தங்கியிருப்பதாக சி.சி.பி. எனும் மத்திய குற்றவியல் பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் நகர் முழுவதும் பொலிஸார் சோதனை நடத்தி கண்காணித்து வந்தனர்.

02

# பயணத்தடையை ஜூலை 2 வரை நீடிக்க மருத்துவர்கள் பரிந்துரை!

## அரசும் தீவிர பரிசீலனையில்

தற்போது அமுலிலுள்ள பயணக்கட்டுப்பாட்டை எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடித்து அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ள நிலையில், அதனை ஜூலை 2ஆம் திகதிவரை நீடிக்குமாறு சுகாதாரத்துறையின் உயர்மட்ட நிபுணர்கள் அரசிடம் பரிந்துரை செய்துள்ளனர்.

அவர்களின் இந்தப் பரிந்துரையை அரசும் தீவிர பரிசீலனையில் எடுத்திருக்கிறது.

முன்னதாக நாளை காலை 4 மணிக்கு பயணத்தடை தளர்த்தப்படுமென இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்திருந்தார். ஆனால், மருத்துவத்துறை நிபுணர்களின் கடும் ஆட்சேபனைகளையடுத்து அந்த அறிவிப்பை வாபஸ் பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதிவரை பயணக்கட்டுப்பாட்டை நீடிக்க அரசு முடிவு செய்தது.

இந்நிலையில் ஜூன் இறுதி வாரத்தில் பொசோன் நிகழ்வும் வரவிருப்பதால் மக்களின் நடமாட்டம் அதிகரிக்கலாம் என்று கருதும் மருத்துவத்துறை நிபுணர்கள், பயணக்கட்டுப்பாட்டை ஜூலை 2 ஆம் திகதி வரை நீடிப்பதே நல்லதென அரசிடம் பரிந்துரைத்துள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த பரிந்துரையை கவனத்திற்கொண்டுள்ள அரசு, நாட்டின் பொருளாதாரம் மற்றும் இதர விளைவுகள் குறித்து சிந்தித்து மிகுந்த கட்டுப்பாடுகளுடன் பயணத்தடையை தளர்த்தலாமா என்பது குறித்து ஆலோசித்து வருகிறது. இம்மாதம் 21 ஆம் திகதியுடன் பயணத்தடையை நீக்கவேண்டுமென்பதே அரச மற்றும் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளின் நிலைப்பாடாக இருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழிலாளர் பாதிப்புகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்பேன்

## நீர்கொழும்பில் அமைச்சர் டக்ளஸ் உறுதி



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கான முதற்கட்ட வாழ்வாதார உதவித் தொகை உடனடியாக வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஏற்பட்டுள்ள அனைத்து பாதிப்புகளும் மதிப்பீடு செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் தீர்த்து வைக்கப்படுவதுடன், எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக கலந்துரையாடி நியாயமான பரிகாரம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

02

# சிலாபத்துறை கரையில் ஒதுங்கியுள்ள கடலாமை



*மன்னார் நகர் நிருபர்*

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை கடற்கரையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (11) காலை உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அண்மையில் இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய கப்பலிலிருந்து வெளியேற்றப் பட்ட ஆபத்தான பொருட்கள் என சந்தேகிக்கப்படும்...

02

# அரிசி, சீனி, பால்மா கையிருப்புகளை பதிவிடுமாறு அதிவிசேட வர்த்தமானி

அரிசி, சீனி, பால்மா மற்றும் சோளம், தொடர்பான கையிருப்பு தகவல்களை 07 நாட்களுக்குள் பதிவுசெய்ய வேண்டும் என அறிவித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் இதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அரிசி உற்பத்தியாளர்கள், ஆலை உரிமையாளர்கள், நெல் அல்லது அரிசியை களஞ்சியப்படுத்தியிருப்போர், அவற்றை விநியோகிப்போர், மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் உள்ளிட்டோர் தங்களிடமுள்ள கையிருப்புகளைப் பதிவுசெய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக குறித்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு 9ஆம் இலக்க நுகர்வோர் விவகார சட்டத்திற்கு அமைய, அதிகார சபையின் தலைவரால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

# நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தம் செய்யத் தயாராகும் அரச தாதிமார்

## 15 ஆம் திகதியென பிரதமருக்கு அறிவிப்பு

அரச தாதிமார் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியிலான வேலைநிறுத்தமொன்றை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றனர். இது தொடர்பில் ஐக்கிய அரச தாதிமார் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

தமது சங்கத்தின் பிரச்சினை குறித்து 11 தடவைகள் அரச தரப்பினருடன் பேச்சு நடத்தியபோதிலும், அதில் உடன்பாடு காணப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் கவனம் செலுத்தாமையினால் இந்த வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும், நாளைய தினத்திற்குள் தீர்வு கிடைக்காத பட்சத்தில் வேலைநிறுத்தம் திட்டமிட்டபடி இடம்பெறுமெனவும் ஆனந்த தேரர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா பாதிப்பில் இந்தியாவை விஞ்சிய இலங்கையின் நிலைமை

## அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு



கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு வீதத்தில் இலங்கை இந்தியாவை விஞ்சிவிட்டதாகவும், நிலைமை மோசமான கட்டத்திற்கு நகர்ந்துள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை விகிதத்தை நோக்கும்போது இலங்கை, இந்தியாவை விஞ்சிவிட்டதாகவும் அந்த வகையில் இலங்கை மிக மோசமான நிலைமையை நோக்கிப் பயணிப்பதாகவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உபதலைவர் விசேட மருத்துவர் நவீன் சொய்சா தெரிவித்துள்ளார்.

02




# மருதமடு ஆடிமாத திருவிழாவில் வெளியாருக்கு அனுமதியில்லை

## மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை

*மன்னார் நிருபர்*

மருதமடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் கொரோனா தொற்றின் காரணமாக திருவிழாவிற்கு வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வருகை தர அனுமதியில்லை என மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை (12) பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருதமடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா எதிர்வரும் 2ஆம் திகதி (02-07-2021) இடம்பெறவுள்ளது.இவ்வருடம் எமக்கு சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள சுகாதாரக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றியே ஆடி மாதத்



திருவிழாவை நடத்த வேண்டியுள்ளது.

எனவே, இம்முறை ஆடி மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ள மருதமடு அன்னையின் திருவிழாவிற்கு மன்னார் மறைமாவட்டத்தை தவிர்ந்த ஏனைய வெளி மாவட்டங்களைச் சேர்ந்த யாத்திரிகர்கள் மற்றும் பக்தர்கள் வருகை தர அனுமதியில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

02

# ப்லொய்ட் கொலையை படம்பிடித்த இளம்பெண்ணுக்கு புலிட்சர் விருது

அமெரிக்க பொலிஸாரால் கறுப்பினத்தவர் ஜோர்ஜ் ப்லொய்ட் கழுத்து அழுத்தப்பட்டு கொல்லப்பட்ட நிகழ்வை உலகிற்கே அடையாளம் காட்டிய 18 வயது இளம்பெண்ணுக்கு பெருமைமிக்க புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

திரைப்படங்களுக்கு வழங்கப்படும் ஒஸ்கர் விருதைப் போன்று ஊடக, புகைப்படக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் உலகின் மிக உயரிய விருதான புலிட்சர் விருது, அமெரிக்கப் பத்திரிகையாளர் ஜோசப் புலிட்சர் என்பவரின் பெயரில் 1912ஆம் ஆண்டு முதல் பத்திரிகை, இணைய ஊடகம், இலக்கியம், இசையமைப்பு, நாடகம், ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு வழங்கப்படுகிறது.

கடந்த 2020ஆம் ஆண்டு மே 25ஆம் தேதி அமெரிக்காவின் மினசோட்டா மாகாணத்தின் ஜோர்ஜ் ப்லொய்ட் என்ற கறுப்பினத்தவர் மின்னிகியூ நகர பொலிஸ் அதிகாரி கழுத்தில் அழுத்தியதன் காரணமாக உயிரிழந்தார்.



இந்தச் சம்பவத்தை 18 வயது அமெரிக்க இளம்பெண் டார்னெல்லா பிரேஸர் தனது ...

02

## கொரோனா பாதிப்பில்...

நாட்டில் பயணத்தடை நடைமுறையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும், வீதிகளின் நிலைமையை பார்க்கும்போது அவ்வாறு தெரியவில்லை என குறிப்பிட்ட அவர் பயணத்தடையை ஒவ்வொரு தடவையும் மீறும் போதும் நமக்கு நெருக்கமான மனித உயிர் ஒன்றை நாம் இழக்கின்றோம் என்பதை நாட்டு மக்கள் அனைவரும் மனதில் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவில் 2 மில்லியன் வைரஸ் தொற்று நோயாளர்களுக்கு 2.01 வீதமானோர் மரணமடையும் நிலையில் இலங்கையில் ஒரு மில்லியன் நோயாளர்களில் 1.91 வீதமாக மரணிப்போர் தொகை உள்ளதாகவும், மாவட்ட ரீதியில் இடம்பெறும் மரணங்களை கணக்கிடும்போது அது மேலும் அதிகமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் அந்த வீதம் மில்லியனுக்கு 7.01 விதமாகவும், கண்டியில் அது 4.49 வீதமாகவும், கொழும்பில் அது 2.43 வீதமாகவும், கம்பஹாவில் 2.46 வீதமாகவும், களுத்துறையில் அது 3.34 வீதமாகவும் காணப்படுவதாக அறிக்கைகள் மூலம் தெரிய வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மருதமடு...

பக்தர்கள் வழமையாக ஆயிரக்கணக்காக குறித்த திருவிழாவிற்கு வந்து மருதமடு அன்னையை தரிசித்துச் செல்வார்கள்.

ஆனால், இவ்வருடம் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக இந்த நாட்டில் இருக்கக்கூடிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பல்வேறு கட்டுப்பாடுகள் அரசாங்க அதிகாரிகள் ஊடாகவும், சுகாதார அதிகாரிகள் ஊடாகவும் எமக்குத் தரப்பட்டுள்ளன.

எனவே, நாங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 23 ஆம் திகதி (23-06-2021) மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழாவிற்கான கொடியேற்றத்தினை நடத்துவோம்.

அதனைத் தொடர்ந்து நவநாள் திருப்பலிகளும் இடம்பெறும். ஆனால், குறித்த நவநாள் திருப்பலிகளுக்கு 15 நபர்கள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

அதன் பின்னர் எதிர்வரும் ஆடி மாதம் 2 ஆம் திகதி (02-07-2021) காலை திருத்தலத்தின் முன் பக்கத்திலிருக்கும் இடத்திலிருந்து திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப ஆசீர்வாதமும் வழங்கப்படும். ஆனால், நாங்கள் அன்றைய தினம் அதிகமான திருப்பலிகளை நடாத்தினாலும், ஒவ்வொரு திருப்பலியிலும் ஆகக்கூடியது 30 பேர் மாத்திரமே பங்குகொள்ள முடியும்.

மேலும், வெளியிலிருந்து ஆலயத்திற்கு வருகின்றவர்கள் மடு சந்தியில் வைத்து அன்ரிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அதன் பின்னரே ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

திருவிழா திருப்பலி காலையில் இடம்பெறும் போது அதனை நாங்கள் தொலைக்காட்சிகளில் நேரடியாக அஞ்சல் செய்ய எதிர்பார்த்துள்ளோம். நீங்கள் வீடுகளிலிருந்தே தொலைக்காட்சி ஊடாக திருவிழாவில் பங்கெடுக்க முடியும்.

திருப்பலியைத் தொடர்ந்து மேலும் 5 திருப்பலிகள் அன்றைய தினம் இடம்பெறும். அதற்கு மன்னார் மறைமாவட்டத்தில் வெவ்வேறு மறைக்கோட்டத்திலுமிருந்து மக்களை அழைத்து வருவார்கள்.

ஆகவே, இந்தக் கட்டுப்பாட்டுக்களை மக்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். மருதமடு அன்னையிடம் இவ்வருடம் விசேடமாக மன்றாடிக் கேட்போம். அவருடைய வலிமையுள்ள பரிந்துரையினால் இந்த கொள்ளை நோய் முற்று முழுதாக எம்மிடமிருந்து ஒழிக்கப்பட்டு, நாங்கள் இந்த நாட்டில் விடுதலை பெற்ற மக்களாக மீண்டும் எமது வழமையான வாழ்க்கையை வாழக்கூடிய மக்களாக இருக்க எமக்கு மருதமடு அன்னை இறைவனிடமிருந்து அவசியமான அருளை பெற்றுத்தர வேண்டும் என்று மன்றாடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 90 ஒளியாண்டுகள் தொலைதூரத்தில் தண்ணீர், மேகம் கொண்ட புதிய கிரகம்



சூரியனைச் சுற்றி ஒன்பது கிரகங்கள் வலம் வரும் நிலையில், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா, பூமியிலிருந்து 90 ஒளியாண்டுகள் தொலைவில் டிஓஐ 1231 பி என்கிற புதிய கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளது. இந்தக் கிரகம் பூமியை விட மூன்றரை மடங்கு பெரியது என்றும், நெப்டியூன் கிரகத்தின் மறு உருவம் இதுவென்றும் நாசா கூறியுள்ளது.

இதிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால் பூமியைப் போலவே இந்தக் கிரகத்தில் தண்ணீர் மற்றும் மேகங்கள் உள்ளதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ரெட் டுவார்ஃப் எனப்படும் 'சிவப்பு 90 குள்ளன்' என்கிற நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது இந்தக் கிரகம். சூரியனை விட அளவில் சிறியதான இந்த சிவப்பு குள்ளன் நட்சத்திரத்துக்கு சூரியனைவிட வயது அதிகம்.

சிவப்பு குள்ளன் நட்சத்திரம் இருக்கும் பகுதியே குளிர்மையானது என்பதால் இந்தப் புதிய கிரகமும் குளிர்மை நிறைந்தது. இந்தக் கிரகத்தின் தட்பவெட்பம் அறிய பார்கோட் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கிரகத்தில் ஹைட்ரஜன் வாயு அணுக்கள் உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஹபிள் தொலைநோக்கிபோல சக்தி வாய்ந்த தொலைநோக்கி மூலமாகவே இந்தக் கிரகத்தைக் காணமுடியும்.

தென் கலிபோர்னியா மாகாணத்தில் நாசா விஞ்ஞானி டொக்டர் ஜெனிபர் பார்ட் தலைமையில் விஞ்ஞானிகள் இந்தக் கிரகத்தை ஆய்வுசெய்து வருகின்றனர். நியூ மெக்சிக்கோ பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களும் டிஓஐ 1231 பி கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது குறித்து ஏற்கனவே பேட்டி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடற்றொழிலாளர்...

இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் தொடர்பாக நீர்கொழும்பு பிரதேச மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்குமிடையில் நேற்று (12.06.2021) நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்குறித்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில், குறித்த கப்பல் விபத்தினால் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துரைத்த, நீர்கொழும்பு கடற்றொழிலாளர்கள், தமக்கு தற்போது ஏற்பட்டுள்ள வாழ்வாதார பாதிப்புகளுக்கு அரசாங்கம் நஷ்டஈட்டினை அல்லது நிதி நிவாரணங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

மேலும், கப்பல் விபத்து மாத்திரமன்றி, கொரோனா பரவல் காரணமாகவும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், எரிபொருளின் விலையேற்றம் மேலதிக சுமையாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன், அண்மைக்காலமாக சந்தைக்கு வருகின்ற வலைகளின் தரம் தொடர்பாக அதிருப்தி வெளியிட்ட கடற்றொழிலாளர்கள், தரமான வலைகள் தொடர்பாக கடற்றொழில் அமைச்சு அவதானம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினர்.

அது தவிரவும் தமது தொழில் நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்பும்வரை பாதிக்கப்பட்டுள்ள கடலை நம்பி வாழும் சுமார் பத்தாயிரம் குடும்பங்களின் எதிர்காலம் தொடர்பாக தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர, நீர்கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினரும் பெருந்தெருக்கள் இராஜாங்க அமைச்சருமான நிமல் லன்சா, கடற்றொழில் அமைச்சின் செயலாளர், திணைக்கள பணிப்பாளர்கள், அமைச்சரின் செயலாளர்கள் மற்றும் சூழல் பாதுகாப்பு அதிகாரிகளும் கலந்துகொண்ட குறித்த கூட்டத்தில், அதிகமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமான நீர்கொழும்பில் விசேடமான கடற்றொழில் அமைச்சின் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தவும், அந்த அலுவலகத்தின் ஊடாக கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள், முறைப்பாடுகள் என்பவற்றுக்கு உடனடித் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், பாதிக்கப்பட்ட பிர தேசத்தில் பிடிக்கப்படும் மீன்களை பரிசோதனைக் குட்படுத்தி உறுதிப்படுத்துவதுடன், சந்தை வாய்ப்பு சீராகும்வரை அந்த மீன்களை, மீன்பிடித் திணைக்களமே கொள்வனவு செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழிலாளர்கள் மாத்திரமன்றி, கருவாடு உற்பத்தியில் ஈடுபட்டவர்களும் வாழ்வாதார பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில், அவர்களுக்கான நஷ்டஈட்டினை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

அத்துடன், அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் உறுதியளிக்கப்பட்ட முதற்கட்ட வாழ்வாதார உதவித் தொகையினை அடுத்த சில நாட்களுக்குள் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும், முழுமையான பாதிப்புக்களுக்கான பரிகாரங்கள் கட்டம் கட்டமாக விரைந்து மேற்கொள்ளப்படும் எனவும், எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி நியாயமான பரிகாரம் பெற்றுத் தரப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ப்லொய்ட்...

செல்போனில் பதிவு செய்த வீடியோ உலக அளவில் பேசுபொருளானது. இதையடுத்து இளம்பெண் டார்னெல்லா பிரேஸரை கௌரவப்படுத்தும் நோக்கில், அவருக்கு சிறப்பு புலிட்சர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தனது அற்புதமான படங்கள் மூலம் 2 பிரிவுகளில் புலிட்சர் விருதினை தட்டிச் சென்றார் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த எமிலியோ மொரநாட்டி என்ற புகைப்படக் கலைஞர். இவர் அசோசியேட்டட் பிரஸ் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

பல்வேறு தீவிரமான மக்கள் போராட்டங்களின்போது சற்றும் பதற்றம் இல்லாமல் எமிலியோ பதிவுசெய்த படங்கள் அவருக்கு இரண்டு புலிட்சர் விருதுகளை பெற்றுத் தந்துள்ளன.

## கொரோனா...

இதற்கிடையில் நகரின் இரண்டு வீடுகளில் 38 இலங்கைத் தமிழர்கள் தங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களை சி.சி.பி. பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர். இது குறித்து மங்களூரு நகர பொலிஸ் ஆணையாளர் சசிகுமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மார்ச் 17இல் இலங்கையிலிருந்து 39 தமிழர்கள் புறப்பட்டு கடல் மார்க்கமாக தமிழகத்தின் தூத்துக்குடிக்குள் நுழைந்துள்ளனர். தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல் நடந்ததால் பாதுகாப்பு காரணமாக பஸ்கள் மூலம் ஒன்றரை மாதங்களுக்கு முன் பெங்களூரு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து மங்களூரு அழைத்து வந்துள்ளனர்.

இரண்டு லொட்ஜ்கள் மற்றும் இரண்டு வீடுகளில் தங்கியிருந்த 38 பேர் கைதுசெய்யப்பட்டனர். ஒருவர் இலங்கைக்கே சென்று விட்டதாக கூறினர். ஆனாலும் அவரை தேடி வருகின்றோம். கனடாவில் கூலி வேலை வாங்கி தருவதாக கூறி ஒவ்வொரு நபரிடமிருந்து பல லட்ச ரூபாவை இலங்கை முகவர்கள் பெற்றுள்ளனர்.

மங்களூரிலிருந்து கள்ளப் படகுகள் மூலம் கனடா செல்லத் திட்டமிட்டிருந்தாக தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களிடம் கடவுச்சீட்டு கிடையாது. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காரணமாக அனைவரையும் கைதுசெய்துள்ளோம். வெவ்வேறு கோணங்களிலும் விசாரித்து வருகிறோம். இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக மங்களூருவை சேர்ந்த ஆறு பேரை பிடித்து அவர்களிடமும் விசாரணை மேற்கொண்டு வருகிறோம் - இவ்வாறு அவர் கூறினார்.

### தமிழகத்திலும் சிக்கிய கோஷ்டி

இதேவேளை இலங்கையிலிருந்து கனடா நாட்டுக்குச் செல்ல கள்ளப்படகில் தூத்துக்குடி வழியாக மதுரை வந்து தங்கியிருந்த 23 பேர், முகவர் ஒருவர் என 24 பேர் கியூ பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.இலங்கையைச் சேர்ந்த சிலர், மதுரை கப்பலூரில் வீடு ஒன்றில் சட்டவிரோதமாக 10 நாட்களாக தங்கியிருப்பதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அவர்களை சோதனை செய்ததில் 2 சிங்களவர்கள் உட்பட 21 இலங்கைத் தமிழர்கள் இருந்தனர். விசாரணையில், கனடா நாட்டுக்கு தங்களை அனுப்புவதாகக் கூறி பணம் பெற்றுக்கொண்டு மதுரை கூடல்நகர் அசோக்குமார் தங்க வைத்ததாகக் கூறினர். அசோக்குமார் தலைமறைவானார். அவரது வீட்டில் பொலிஸார் சோதனை நடத்தினர். சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைந்த 23 பேர், முகவர் ஒருவர் என 24 பேரை நேற்று கைதுசெய்தனர். இது தொடர்பில் பொலிஸார் கூறியதாவது:

கனடா நாட்டில் இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு விசா தருவது நிறுத்தப்பட்டுள்ளது. அங்கு இலங்கையைச் சேர்ந்தவர்கள் பல்வேறு தொழில்கள் செய்கின்றனர். அவர்களிடம் வேலை செய்ய 23 பேர் விரும்பி, அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது அசோக்குமார் தொடர்பு கொண்டுள்ளார். இவரின் சகோதரி சியாமளா தேவி இலங்கை தாதா அங்கொடா லொக்கா இறந்த விவகாரத்தில் போலி ஆதார் அட்டை தயாரித்து கொடுத்ததாக கைதானவர்.இவர்களின் குடும்பத்திற்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் நீண்டகாலத் தொடர்பு உண்டு. அதனடிப்படையில் 23 பேரை சட்டவிரோதமாக அசோக்குமார் அழைத்து வந்துள்ளார். சில போலி ஆதார் அட்டைகளை பறிமுதல் செய்துள்ளோம். அசோக்குமாரிடம் விசாரித்தால் முழுமையான விபரங்கள் தெரியவரும் - என்றனர்.

## சிலாபத்துறை..

சில பொருட்கள் கடந்த வியாழக்கிழமை மன்னார் வங்காலை கடற்கரை மற்றும் சிலாபத்துறை கடற்கரைகளில் கரையொதுங்கின. இந்நிலையில் அதிகாரிகள் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (11) காலை முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இதனை குறித்த பிரதேச மக்களும், மீனவர்களும் பார்த்துள்ளதோடு,உரிய அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர்.குறித்த கடற்கரையிலும் சிறிய பிளாஸ்ரிக் உருண்டைகள் கடற்கரையோரங்கள் முழுவதிலும் சிதறிய நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வெடிமணியம் தொடர்ச்சி...

*அல்லது கூப்பிட்டு வெருட்டி அனுப்பியிருப்பினம். ரண்டில ஒண்டு நடந்திருக்கும் எண்டது உறுதி.*

*பசில் வாயைத்திறந்து சொல்லும் வரைக்கும் கதை வெளியில வராது.*

*கத்தரிக்காய் மலிஞ்சால் கொழும்பு சந்தைக்கு வரத்தானே வேணும் ராசா!*

*ஏற்கனவே அமெரிக்கா தன்னுடைய "கழுகுகளை" கொழும்புக்குள்ள உளவுபாக்க அனுப்பிவிட்டதாக தகவல்கள் கசிஞ்சதால;*

*கோட்டாபய "கொதிச்சுப்போய்" அமெரிக்க அதிகாரிகளைக்கூப்பிட்டு விசாரிச்சு அனுப்பியிருக்கிறார்.*

*பசிலைக்கூப்பிட்டு விசாரிச்சதுக்கு "பதிலடி" எண்டும் சொல்லலாம்.*

*அல்லது "உள் டீலிங்" ஆகவும் இருக்கலாம்.*

*அமெரிக்கத்தரப்பு விடயங்களை "கசிய" விடும் வரை தகவல்கள் வெளியில வராது.*

*இத்தனைக்கும் "சீனா" ஒண்டும் பறையாமல் அமசடக்கா இருக்குதெண்டால்;*

*விவகாரம் கொஞ்சம் "சீரியஸ்" ஆகத்தான் இருக்கவேணும்.*

*இலங்கையில் சீனாவின் அடுத்தகட்ட நகர்வை உன்னிப்பா அவதானிச்சால் அமெரிக்கா என்ன செய்யபோகுது எண்டது புலப்படும்.*

*கொழும்பு அரசியலில் ஒரு "கதகளி" ஆடி;*
*ஆளும் அரசைத் துண்டாடி விடவோ அல்லது எதிர்க்கட்சியை பலப்படுத்தவோ அமெரிக்காவும், மேற்குலகும் ஒரு மறைமுக "ஒப்பிரேசனை" ஆரம்பித்துவிட்டதாகவே தெரிகிறது.*

*ஆனாலும்;*
*ஆளும் தரப்போ எந்த அசுமாத்தமும் இல்லாமல் சிம்பிளா கடந்துபோவதை காணமுடிகிறது.*

*இந்த அசட்டு தைரியத்தின் பின்னணி "சிங் சங் சொங்" எண்டு சனம் கதைக்குது.*

*சீனாவுடனான "டீலை" ஆளும் தரப்பு மிக கச்சிதமாக ஒவ்வொண்டாக நிறைவேற்றி வரும் நிலையில்;*

*தெற்கில் சீனாவுக்கு எதிரான "சலசலப்புகள்" ஓரளவுக்கு அடங்கிவிட்டதாகவோ அல்லது அடக்கப்பட்டதாகவோ சொல்லுகினம்.*

*கொரோனாவால இலங்கையின் சனத்தொகையை குறைச்சுப்போட்டு சீனாக்காரன் மூண்டாவது பிள்ளையை பெத்து இங்க அனுப்ப "பிளான்" பண்ணுறான் எண்டு சனம் புறுபுறுக்குது.*

*சீனாவில் இந்தளவு காலமும் ரண்டு பிள்ளைதான் பெறலாம் எண்ட கடும் கட்டுப்பாட்டை தளர்த்தி மூண்டாவது பிள்ளையும் பெறலாம் எண்ட செய்தி சொல்லுது.*

*பொதுவாக சீனாக்காரன் காலூண்டிய நாடுகளில் பொருளாதாரத்தை கணிசமான அளவு கைப்பற்றி தன்ர கையுக்குள்ள கொண்டுவந்துவிடுவான்.*

*பல நாடுகளில் அதுதான் நடந்தது. நடக்குது!*

*ஶ்ரீலங்காவிலும் இதுதான் நடக்கும்.*

*நாட்டின் பொருளாதாரம் டக்கெண்டு கிடுகிடெண்டு உயர வாய்ப்பு அதிகம்.*

*நாட்டின் உட்கட்டுமானங்கள் வளர்ச்சியடையும். முக்கியமாக போக்குவரத்து வசதிகளை மூக்கில விரல் வைச்சுப்பாக்குற அளவுக்கு சீனாக்காரன் உயர்த்துவான்.*

*"அப்ப சீனாக்காரன் ஶ்ரீலங்காவுக்கு வாறது நன்மைதானே! பிறகேன் புறுபுறுக்கிறியள்?" எண்டு கேப்பியள்.*

*சீனாக்காரன் கறையான், எலி,பாம்பு,வெட்டுக்கிளி எல்லாம் சாப்பிட்டு சாப்பிட்டு அதுகள் மாதிரியே ஆகிட்டாங்கள்.*

*வீட்டுக்குள்ள கறையான், எலி,பாம்பு,வெட்டுக்கிளி புகுந்தால் என்ன ஆகும்?*

*யோசியுங்கோ!*

★★★

*ராஜபக்ஷ படையணி 2009 இல் விடுதலைப்புலிகளை அழிக்க போரை தனியா நிண்டு செய்யவில்லை.*

*அமெரிக்கா, இந்தியா, மேற்குலகம் இவைகளின் துணையோடுதான் விடுதலைப்புலிகளின் கதையை கச்சிதமாக முடித்தார்கள்.*

*பின்விளைவுகளை யோசிக்காமல் போர்விதிகளையும் மனித உரிமைச்சட்டங்களையும் தூக்கி எறிந்துவிட்டு;*

*கண்மண் தெரியாமல் போரை நடத்தி வெல்லமுடியாத புலிகளின் சரித்திரத்துக்கு முடிவு கட்டினார்கள்.*

*அது வெற்றியல்ல!*

*அதன் பிறகான ஶ்ரீலங்காவின் "காய்நகர்த்தல்களே" மிக முக்கியமானவையும், தந்திரமானவையும் எண்டு சொல்லலாம்.*
*புலிகளை அழிச்சு போரை முடிச்சு அமெரிக்கா, இந்தியா, மேற்குலகம் ஶ்ரீலங்காவில் கால் பதித்துவிடலாம் எண்ட "கள்ளத்திட்டதில்" தான் இருந்தார்கள்.அதை பகற்கனவாக மாற்றினார்கள் ராஜபக்ஷ படையணி.*

*2009 இல் இனவழிப்புப் போர் நடந்துகொண்டிருந்தபோது சீனா களத்திலேயே இல்லை.*

*ஓரமாக நின்று வேடிக்கை பார்த்தார்கள்.*

*அமெரிக்காவும், இந்தியாவும் தான் குறுக்கமறுக்க ஓடித்திரிஞ்சவை.*

*ஆனால்;*

*ஓரமா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சீனா;*

*போர் முடிஞ்சதும் தன்னுடைய "மாஸ்ரர் பிளானை" சீனா நடைமுறைப்படுத்தியது.*

*ஶ்ரீலங்கா தான் ஏற்கனவே போட்டு வைத்த கள்ளத்திட்டத்தின்படி;*

*ராஜபக்ஷ படையணி அமெரிக்கா, இந்தியா மற்றும் மேற்குலகத் தரப்புகளின் பிடியில் இருந்து மெல்ல மெல்ல விலகினார்கள்.*

*"உனக்கும் பெப்பே.. உன்ர அப்பனுக்கும் பெப்பே" எண்டு ஶ்ரீலங்கா தன்னுடைய பேரினவாத புத்தியை காட்டத்தொடங்கியது.*

*"காரியம் முடிஞ்சதும் கழட்டி விடுவது" என்பது ஶ்ரீலங்காவுக்கு கைவந்த கலை.*

*ராஜபக்ஷ படையணியின் ஆட்சி கவிழ்ந்ததும்;*

*பின்னர் அது என்றுமில்லாதவாறு பேரினவாத வாக்குகளால் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கட்டில் அமர்ந்ததும் சும்மா தானாக நிகழ்ந்ததாய் நினைப்பியள்.*

*ஆழமாக உள்ளபோய் ஆராய்ஞ்சு பாத்தால் பல "அதிர்ச்சிகள்" இருக்கும்.*

*அமெரிக்கா, இந்தியா, மேற்குலக கூட்டணியில் சிக்கி சின்னாபின்னமாவதை விட;*

*இவை எல்லாருக்கும் எதிரா பலமாக நிக்குற ஒரு சக்தியை தேர்ந்தெடுத்தார்கள் ராஜபக்ஷ கூட்டணி.*

*2009இல் எப்படி இனவழிப்புப் போர் புரியும் போது பின்விளைவுகளைப் பற்றி ஒரு சதவீதமும் சிந்திக்கவில்லையோ;*

*அதைப்போலவே சீனாவிடம் தஞ்சம் கோரும்போதும் அவர்கள் பின்விளைவுகளைப்பற்றி சிந்திக்கவேயில்லை.*

*"வந்தா வா, போனாப்போ" எண்ட திடமான முடிவோடு தங்களை சீனாவின் கைகளில் முழுதாக ஒப்புவித்துவிட்டு இண்டைக்கு அமசடக்காய் அமைதியாக காரியங்களை கொண்டு செல்கிறார்கள்.*

*ஶ்ரீலங்காவை ஒரு பௌத்த பேரினவாத நாடாகவும், பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்த நாடாக வைத்திருக்கவேண்டும் என்றால் ஒரே தெரிவு "சீனாதான்" என்பதில் ராஜபக்ஷ படையணி தெட்டத்தெளிவாக இருக்கிறார்கள்.*

*இந்தியாவிடமோ அல்லது அமெரிக்காவிடமோ ஶ்ரீலங்காவை ஒப்படைத்தால்;*

*"பௌத்த பேரினவாத சக்தியை அல்லது பேரினவாத சிந்தனைகளை" கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழக்க வைத்துவிடுவார்கள் எண்டதில் ராஜபக்ஷ படையணி மிகத்தெளிவாக இருந்தது.*

*"ஒப்பிரேசன் சீனா" என்ற ராஜதந்திர வியூகத்தின் மிக முக்கியமான இன்றைய காலகட்டத்தில் ஶ்ரீலங்காவின் அரசியல்களம் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது.*

*இனிமேல் ஶ்ரீலங்காவின் அரசியல் மேடைகளில் புதிய நாடகங்கள் புதிய காட்சிகளுடன் அரங்கேறும்.*

*விறுவிறுப்பான "திருப்புமுனைகளுடன்" காட்சிகள் நகரும்.*

*ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக்கில் காட்டிய "ஆட்டத்தை" ஶ்ரீலங்காவில் அமெரிக்காவால் சிம்பிளாக செய்யமுடியாது.*

*"போர்ட் சிற்றி" வான்பரப்பில் பறக்கும் அமெரிக்க கழுகுகளை சீன "றாகன்கள்" அடிச்சு விழுத்தி தூக்கி எறியும்.*

*"கோல்பேஸ்" கடற்கரையில் காத்திருக்கும் "சிங்கங்கள்" அதை ருசிபார்க்கும்!*

★★★

*இன்னும் சில ஆண்டுகளில் ஶ்ரீலங்காவின் தனிநபர் வருமானத்தை ரண்டுமடங்காக ஆக்கிவிடுவதாக ராஜபக்ஷவின் தலையில அடிச்சு கோட்டாபய சத்தியம் செய்ததாக சொல்லுகினம்.*

*இதென்னடா கோதாரி எண்டு விசாரிச்சால்;*

*கதை உண்மைதான்!*

*நான் ஏற்கனவே சொன்னதுபோல ஶ்ரீலங்காவின் பொருளாதார வளர்ச்சிவீதம் டக்கெண்டு கூடி ;*

*2030 இல் 8000 $ அமெரிக்க டொலர் அளவுக்கு GDP ஐ உயர்த்துவன் எண்டு கோட்டாபய கொழும்பில "தில்லா" சொல்லியிருக்கிறார்.*

*இதென்ன GDP எண்டு கேப்பியள்!*

*ஒரு நாட்டின்ர மொத்த உற்பத்தி வருமானத்தை மொத்த சனத்தொகையால பிரிச்சால் வாறதுதான் இந்த GDP எண்டுறாங்கள்.*

*விளங்குறமாதிரி சொல்லப்போனால் இலங்கையில இருக்கிற ஒரு ஆளின்ர வருமானம் ரண்டு மடங்கு ஆகும் எண்டுறாங்கள்.*

*கிட்டத்தட்ட சைனாக்காறன்ர வருமானம் போல இருக்கும் எண்டுறாங்கள்.*
*கோட்டாபய இதைச்சொல்லும் போது சிரிக்காமல் சீரியஸாத்தான் சொன்னவராம்.*

*அப்பிடியெண்டால் இன்னும் பத்து வருசத்தில நாங்கள் எல்லாரும் "எங்கையோ" போயிடுவம் என்ன!*



# புதிய திரிபுகள் மேலும் வரலாம்!

## கலாநிதி சந்திம ஜீவந்தர விசேட செவ்வி

***பி**ரிட்டனில் கண்டறியப்பட்ட திரிபான பி.1.1.7 என்ற அல்பா திரிபு நாட்டின் முழு பகுதியிலும் பரவியிருக்கும் அபாயமுள்ளது. கடந்த முறை திருகோணமலை, வவுனியா போன்ற பகுதிகளில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ் தற்போது மேலும் பல மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவ்வாறாயின், முழு இலங்கையிலும் பி.1.1.7 என்ற அல்பா திரிபு பரவியுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞானப்பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.*

*'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*முழு செவ்வியும் வருமாறு...*

> **ஒரு திரிபுக்கான மாதிரியை ஆய்வுக்கு உட்படுத்துவதற்கு 50 ஆயிரம் ரூபா செலவாகின்றது.**

> **அல்பா திரிபினால் கொவிட் நியூமோனியா மற்றும் இறப்பு இரண்டுமே அதிக பாதிப்புகளாகும்.**

> **திரிபுகளினால் பாதிப்புகள் அதிகம் என்றால் ஒட்சிசன் தேவை அதிகரிக்கும். ஒட்சிசன் தேவை அதிகரித்தால் தட்டுப்பாடுகளும் ஏற்படலாம்.**

**? நாட்டில் தற்போது புதிய திரிபின் நிலைமை எவ்வாறுள்ளது?**

**பதில் :** நாட்டில் அறிவிக்கப்பட்ட பி.1.1.7 என்ற திரிபு ஆரம்பத்தில் கண்டறியப்பட்டதாகும். இது ஏப்ரல் நடுப்பகுதியிலிருந்தே இலங்கையில் பரவியது. எனினும், ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட பி.1411 இலங்கை திரிபை பி.1.1.7 என்ற அல்பா திரிபு முந்தியுள்ளது. ஆரம்பத்தில் பி.1.1.7 அல்பா திரிபு குறைந்து காணப்பட்டது. தற்போது பல மாவட்டங்களுக்கு வேகமாகப் பரவியுள்ளது.

**? இலங்கை திரிபு இல்லாது போயுள்ளதா?**

**பதில் :** ஒருவர் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ளார். ஏனையவர்களிடத்தில் பி.1.1.7 அல்பா திரிபே அடையாளம் காணப்பட்டது.

**? நாளாந்தம் அடையாளம் காணப்பட்டவர்களிடையே உங்களிடம் வழங்கப்பட்ட மாதிரிகள் அனைத்தும் அல்பா திரிபைக் கொண்டனவா?**

**பதில் :** இல்லை. எங்களுக்கு நாளொன்றிற்கு 1000 மாதிரிகள் கிடைக்கின்றன. அவை அனைத்தையும் ஆய்வுக்குட்படுத்துவதில்லை. ஒரு மாதிரியை ஆய்வுக்குட்படுத்துவதற்கு 50 ஆயிரம் ரூபா செலவாகின்றது. இவ்வாறான நிலையில், அனைத்து மாதிரிகளையும் ஆய்வுக்குட்படுத்த முடியாது. அது பண விரயத்தை ஏற்படுத்தும். இந்த மாதிரிகளில் சந்தேகத்திற்குரிய மாதிரிகளை மாத்திரமே நாங்கள் ஆய்வுக்குட்படுத்துவோம்.

அதன்படி, இம்முறை ஆய்வுக்குட்படுத்திய 82 மாதிரிகளில் தலா ஒரு இந்திய மற்றும் இலங்கை திரிபைத் தவிர ஏனைய 80 மாதிரிகளும் அல்பா என்ற பி.1.1.7 திரிபாகும்.

**? அல்பா திரிபு எதிர்வரும் வாரங்களில் சமூகத்திற்குள் வேகமாக பரவுவதற்கு வாய்ப்புள்ளதா?**

**பதில் :** சமூகத்திற்குள் பரவுவதற்கு வாய்ப்புள்ளதா என்பதையும் தாண்டி நன்றாகவே சமூகத்திற்குள் பரவிவிட்டது. கடந்த முறை திருகோணமலை, வவுனியா போன்ற பகுதிகளில் கண்டறியப்பட்ட பி.1.1.7 என்ற அல்பா திரிபு புதிய மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவ்வாறாயின், முழு இலங்கையிலும் பி.1.1.7 என்ற அல்பா திரிபு பரவியுள்ளது. இந்தியத் திரிபு மாத்திரமே சமூகத்திற்குள் பரவவில்லை. அல்பா முழு சமூகத்திற்குள்ளும் பரவியுள்ளது.

**? திரிபுகள் சமூகத்திற்குள் செல்லுமாக இருந்தால் அது எத்தனை பேரிடம் பரவும்?**

**பதில் :** அதனைக் கூற முடியாது. ஆரம்ப திரிபுகளை விட 50 வீதம் வேமாக பரவும்.

**? இந்தப் புதிய திரிபுகள் இணைந்து வேறுவகை திரிபை உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதா?**

**பதில் :** அதனைக் கூறுவது மிகக் கடினமானது. எனினும், புதிய திரிபு உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால், உருவாகும் அனைத்து திரிபுகளும் வேகமாக பரவும் எனக் கூற முடியாது. ஒன்றரை வருடத்தில் இரு திரிபுகளே வேகமாக பரவும் திரிபாக உருமாறியுள்ளன. மில்லியன் கணக்காக மக்களிடையே பரவும் தொற்றால் இரு திரிபுகளே வேகமாகப் பரவக்கூடியவையாக இருக்கும் என்றால் இலட்சக்கணக்கான மக்களிடம் பரவும் திரிபுகளால் புதிய திரிபு உருவாகாது. எனினும், அவ்வாறு நடக்காது என்று கூறவும் முடியாது. இரண்டும் நடக்கலாம்.

**? அல்பா திரிபுகளினால் மரணங்கள் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதா?**

**பதில் :** நிச்சயமாக. மரணங்கள் 52 வீதத்தால் அதிகரிக்கும். தற்போது அதிக மரணங்கள் ஏற்படுவதற்கும் காரணமாகவுள்ளது.

**? இந்த புதிய திரிபினால் ஒட்சிசன் தேவைப்பாடு அதிகரிக்கும் வாய்ப்புள்ளதா?**

**பதில் :** புதிய திரிபுகளினால் ஏற்படும் பாதிப்புகள் அதிகமே. பாதிப்புகள் அதிகம் என்றால் ஒட்சிசன் தேவை அதிகரிக்கும். ஒட்சிசன் தேவை அதிகரித்தால் தட்டுப்பாடுகளும் ஏற்படலாம். அதிகமானோருக்கு ஒட்சிசன் தேவை ஏற்பட்டால் அதிகளவாக ஒட்சிசனை வழங்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

**? பிரிட்டன் திரிபு தவிர, ஆரம்பத்தில் பல திரிபுகள் காணப்பட்டன. அவை இம்முறை அடையாளம் காணப்படவில்லையா?**

**பதில் :** வேறெந்த திரிபும் அடையாளம் காணப்படவில்லை. ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட திரிபுகள் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து அடையாளம் காணப்பட்டதால் இம்முறை சமூகத்திற்குள்ளிருந்து வேறு திரிபுகள் அடையாளம் காணப்படவில்லை.

**? நீங்கள் கடந்த மாதத்திலுள்ள மாதிரிகளைக் கொண்டு மாதத்திற்கு ஒருமுறை திரிபு குறித்து ஆராய்வதால் திரிபு பரவுவதை தடுக்க முடியுமா?**

**பதில் :** இல்லை. திரிபுகளை விட கொரோனா தொற்றே முக்கியமானது. எந்தத் திரிபு பரவினாலும் அதனைத் தடுப்பதற்கு ஒரு வழியே உள்ளது. ஆகவே, கொரோனா தொற்று ஒருவரிடத்திலிருந்து ஒருவருக்குப் பரவுவதையே தடுக்க வேண்டும்.

சில நாடுகளில் திரிபுகள் பரவுவது தடுக்கப்பட்டுள்ளன. சில நாடுகளில் திரிபுகளைக் கண்டறிவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது குறைவு.

**? திரிபுகளைக் கண்டறிவது கட்டாயமானதா?**

**பதில் :** நிச்சயமாக திரிபுகள் குறித்து ஆய்வு செய்யவேண்டியது கட்டாயமாகும். அப்போதே, திரிபுகள் குறித்து கண்டறிந்து அதற்கேற்றவாறு எங்களுடைய நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள முடியும்.

**? திரிபுகளைக் கண்டறிவதற்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாதிரிகளைப் பெற்றுக் கொண்டீர்களா?**

**பதில் :** அவ்வாறு கூற முடியாது. எங்களுக்கு மாதிரிகள் கிடைக்கும் வகையிலேயே நாங்கள் ஆய்வுகளை முன்னெடுக்கின்றோம்.

**? நாட்டில் கடந்த சில வாரங்களாக 25 மாவட்டங்களிலும் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றமையினால் எதிர்வரும் ஆய்வின்போது 25 மாவட்டங்களிலும் மாதிரிகள் பெற்றுக்கொள்வது அவசியமில்லையா?**

**பதில் :** அவசியமாகும். எனினும், எங்களுக்குக் கிடைக்கும் மாதிரிகளுக்கு அமையவே நாங்கள் ஆய்வுகளை முன்னெடுக்கின்றோம். ஒருவேளை, 25 மாவட்டங்களிலுமிருந்தும் மாதிரிகள் கிடைக்கப்பெற்றால் நாங்கள் ஆய்வுகளை முன்னெடுப்போம்.

எனினும், ஒரு திரிபு வேகமாகப் பரவி வருகின்றதென்றால் அது குறித்து ஆய்வுசெய்வது பொருத்தமற்றது. மாற்றங்கள் ஏற்படுமாக இருந்தால் மாத்திரமே திரிபு குறித்த ஆய்வு அவசியமாகும்.

**? அல்பா திரிபுக்கு தடுப்பூசிகள் பதிலளிக்குமா?**

**பதில் :** நிச்சயமாக அனைத்துத் தடுப்பூசிகளாலும் அல்பா திரிபைக் கட்டுப்படுத்த முடியும். இந்தியத் திரிபு, இலங்கைத் திரிபு என அனைத்து திரிபுகளையும் தற்போது வழங்கப்படும் சினோபார்ம், எஸ்ட்ராசெனிகா மற்றும் ஸ்புட்னிக்-வீ உள்ளிட்ட அனைத்து தடுப்பூசிகளாலும் கட்டுப்படுத்த முடியும்.

**? புதிய திரிபுகள் எவ்வாறான பாதிப்பை அதிகம் ஏற்படுத்தும்?**

**பதில் :** அல்பா திரிபினால் கொவிட், நியூமோனியா மற்றும் இறப்பு இரண்டுமே அதிக பாதிப்புகளாகும். தொற்று ஏற்பட்டு நியூமோனியா ஏற்பட்டால் அடுத்து இறப்புத்தான்.

**? உங்களுக்குக் கிடைத்த மாதிரிகளில் இறந்தவர்களின் மாதிரிகள் இருந்தனவா?**

**பதில் :** அதனை சரியாகக் கூற முடியாது. எனினும், ஒருவர் அல்லது இருவர் இருந்திருக்கக்கூடும். எங்களுக்குக் கிடைக்கும் மாதிரிகளில் திரிபு இருக்கின்றதா என்பதை மாத்திரமே நாங்கள் தெரிவிப்போம். மாறாக, இறந்தவர்கள் இருக்கின்றனரா என்பதைக் கூற முடியாது.

**நேர்காணல் : யோ.தர்மராஜ்**

தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42, தொலைபேசி : 015 88 61 87
விளம்பரம் : 077 693 0739
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

# இலங்கைக்கு கிடைத்த அதிர்ச்சி வைத்தியம்

இலங்கைக்கான ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை தற்காலிகமாக விலக்கிக்கொள்வதற்கான போதிய காரணங்கள் உள்ளனவா என்பது குறித்து ஆராயுமாறு கோரும் தீர்மானமொன்றை ஐரோப்பிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள விடயம் இலங்கை அரசுக்கு அதிர்ச்சியை கொடுத்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

ஐக்கிய நாடுகளின் சமீபத்தைய இலங்கை குறித்த அறிக்கை தெரிவித்ததுபோல் இலங்கை மீண்டும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் நிலைக்கு சென்றுகொண்டிருப்பது குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றம் கவலையை வெளியிடுவதாக இந்த புதிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றனர் எனவும், பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது சித்திரவதைகள், பாலியல் துஷ்பிரயோகம், பலவந்தமாக வாக்குமூலம் பெறுதல் ஆகியவற்றிற்கு காரணமாக அமைந்துள்ளது எனவும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தைக் கைவிடுவது மறுஆய்வு செய்வது குறித்த தங்களது வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவேண்டும், சர்வதேச நடைமுறைகளை பின்பற்றும் புதிய சட்டத்தை உருவாக்கவேண்டும் எனவும் தீர்மானம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவோம், மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச பிரகடனங்களை நடைமுறைப்படுத்துவோம் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே 2017இல் ஜிஎஸ்பி வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொண்டது என தீர்மானம சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை தனது மனித உரிமை கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஜிஎஸ்பி வரிச்சலுகையை ஒரு செல்வாக்கு செலுத்தும் விடயமாக ஐரோப்பிய ஆணைக்குழுவும், ஐரோப்பிய வெளிநாட்டு செயற்பாட்டு சேவையும் பயன்படுத்தவேண்டும் என நாடாளுமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இறுதி முயற்சியாக இலங்கைக்கான ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை தற்காலிகமாக விலக்கிக்கொள்ள முடியுமா என்பது குறித்து ஆராயுமாறும் தீர்மானம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மரத்திலேறி விழுந்தவனை மாடுமிதித்த கதையாக ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் இந்தத் தீர்மானம் இலங்கைக்கு அமைந்திருக்கிறது. ஏற்கனவே கொரோனா நிலைமையால் இலங்கையின் பொருளாதாரம் தட்டுத்தடுமாறிக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையும் இலங்கைக்கு அற்றுப்போகுமானால் நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு செல்வதை தடுக்கமுடியாமல் போய்விடும்.

இலங்கையில் ஜனநாயகம், நல்லாட்சி என்பதற்கப்பால் தற்போதைய அரசின் சீன சார்புடைய செயற்பாடுகளால் மேற்குலக நாடுகள் அதிருப்தியில் இருப்பதாகவே தெரிகிறது. சீனாவுடன் நெருங்கிப்பழகும் இலங்கைக்கு ஆப்பைச் சொருகுவதற்காக மேற்குலக நாடுகள் தயாராகிவிட்டமை இதன்மூலம் புலனாகிறது. எவ்வாறாயினும், ஜனநாயக வரம்புகளை மீறும் செயற்பாடுகளால் இலங்கை தொடர்ந்தும் உலக நாடுகளை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது .


இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிடக் கூடாதென்ற கொழும்பின் நிலைப்பாடு மேற்குலகத்தை அடக்கிவிட்டதாக கருதிவிட முடியாது. சீனாவின் முதலீட்டுக்கும், உதவிகளுக்கும் அப்பால் இலங்கையானது மேற்குலக வல்லாதிக்க நாடுகளின் உதவியில்லாமல் முன்னோக்கிச் செல்லமுடியாது. ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையானது இலங்கைக்கு கிடைக்காத பட்சத்தில் ஏற்படும் தாக்கங்களை இலங்கை அப்போது உணர்ந்துகொள்ளும்.

இடைநிறுத்தப்பட்டிருந்த ஜீ.எஸ்.பி. வரிச் சலுகையை மீண்டும் பெற்றுகொடுப்பதற்கு 2016ஆம் ஆண்டு 58 நிபந்தனைகளை விதித்தது ஐரோப்பிய ஒன்றியம்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குதல், அச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீதான வழக்குகளை துரிதப்படுத்துதல், புதிய மனித உரிமைகள் செயற்பாட்டை அறிமுகப்படுத்தல், புதிய அரசியலமைப்பினூடாக அதிகாரப்பகிர்வுக்கு வழிவகுத்தல், வடக்கிலுள்ள தனியார் நிலங்களை மீண்டும் உரிமையாளர்களுக்கு கையளித்தல் மற்றும் தேசிய நல்லிணக்கம் மற்றும் மீள்குடியேற்றத்திற்கான கொள்கையை அறிமுகப்படுத்தல் உட்பட பல முக்கிய நிபந்தனைகள் அதில் உள்ளடங்கின.

ஆனால், இவற்றில் எதனையுமே உரியவகையில் நிறைவேற்றாமல் வெறுமனே சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவியை பெற்றுக்கொண்டு தலைமேல் கையை வைத்துக்கொண்டிருக்கிறது இலங்கை அரசு.

# சமூகத் தடுப்பாற்றல் ஒரே வழிதானா?



கொரோனா வைரஸிலிருந்து தப்பிப்பதற்கு ‘சமூகத் தடுப்பாற்றல்’தான் (herd immunity) முக்கியமான வழி என்றே சொல்லப்பட்டு வருகிறது. போதுமான அளவு மக்களுக்குத் தடுப்பூசி போட்டால் – அதாவது, 60 வீதத்திலிருந்து 70 வீதம் வரையிலான மக்களுக்கு வைரஸால் அதற்கு மேல் பரவ முடியாமல் போகலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால், பெருந்தொற்றிலிருந்து முற்றிலும் விடுபட முடியும் என்ற நம்பிக்கை சமீபத்தில் குறைந்துள்ளது. “சமூகத் தடுப்பாற்றலுக்கான எல்லையை எட்ட முடியாது என்ற கருத்தொற்றுமை அறிவியலர்களிடமும் பொதுச் சுகாதார வல்லுநர்களிடமும் பரவலாகக் காணப்படுகிறது” என்று ‘தி ரைம்ஸ்’ இதழில் அபூர்வா மந்தவில்லி எழுதியுள்ளார்.

மிகவும் கொடுமையாகப் பரவும் கொரோனா வைரஸின் பி.1.1.7. வேற்றுருவத்தின் வருகைக்கு முன்புதான் சமூகத் தடுப்பாற்றலுக்கான எல்லை வரையறுக்கப்பட்டது. தற்போது அந்தக் கணிப்பு 80 வீதத்தை நோக்கித் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் வேகமாகப் பரவும் வேற்றுருவங்கள் உருவானால், இந்தக் கணிப்பு இன்னும் அதிகரிக்கும்.

### தடுப்பூசித் தயக்கம்

தடுப்பூசி செலுத்தப்படாத பகுதிகளில் கட்டுப் படுத்தப்படாமல் இந்த வைரஸ் எந்தளவுக்குப் பரவுகிறதோ அந்தளவுக்கு அது புதுப்புது அவதாரங்கள் எடுக்க வழி ஏற்படும். தற்போது உலகளாவிய தடுப்பூசி விநியோகம் மிகவும் ஏற்றத்தாழ்வான நிலையிலேயே உள்ளது. உலகளவில் போடப்படும் டோஸ்களில் 0.3 வீதம்தான் குறைந்தளவு வருமானம் கொண்ட நாடுகளில் போடப்படுகின்றது.

இந்த எல்லாக் காரணிகளும் சேர்ந்து கொரோனா வைரஸை உலகளவில் ஒழிப்பதென்பது கிட்டத்தட்ட சாத்தியமற்ற ஒன்றாக ஆக்குகின்றன. நோய்த் தடுப்பாற்றல் வல்லுநர்கள், தொற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள், வைரஸ் வல்லுநர்கள் போன்ற 100 பேரிடம் ‘நேச்சர்’ இதழ் ஜனவரியில் ஒரு கருத்துக்கணிப்பு நடத்தியது. இனிவரும் காலங்களில் கொரோனா தொற்று சீரான அளவில் உலகெங்கும் சுற்றிக்கொண்டுதான் இருக்கும் என்று 90 வீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர். அப்படியென்றால் இயல்பு வாழ்க்கை என்பது திரும்பவே திரும்பாதா? அப்படி இல்லை. இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு சமூகத் தடுப்பாற்றலை மட்டுமே நம்பியிருப்பது தவறு என்று ஹார்வர்ட் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த அப்ரார் கரண் உள்ளிட்ட வல்லுநர்கள் பலரும் தற்போது கூறுகிறார்கள்.

### சமூகத் தடுப்பாற்றல் வரலாறு

முந்தைய பெருந்தொற்றுகளின் வரலாறு நமக்கு இங்கே உபயோகமாக இருக்கலாம். 1918ஆம் ஆண்டு ஏற்பட்ட ஸ்பானிஷ் ஃப்ளூவின்போது தடுப்பூசி ஏதும் இல்லை. அந்தப் பெருந்தொற்றின்போது மனிதர்களுக்கு சமூகத் தடுப்பாற்றலும் ஏற்படவில்லை. எந்த நோய்க்குமே சமூகத் தடுப்பாற்றல் எட்டப்பட்டதில்லை என்று யேல் பல்கலைக்கழகத்தின் பொதுச் சுகாதார பேராசிரியர் ஹோவர்ட் ஃபோர்மன் கூறுகிறார்.

1918ஆம் ஆண்டு வைரஸுக்கு அதிக மக்களிடையே நோய் எதிர்ப்புச் சக்தி தோன்றவே, அந்த வைரஸ் பரிணாமமடைந்தது, இன்று காணப்படும் வைரஸ்களிடம் தனது வலுவற்ற வடிவங்களை அது கடத்தியது என்றும் இதழாளர் ஹெலன் பிரான்ஸ்வெல் கூறுகிறார்.

“உண்மை என்னவென்றால் பெருந்தொற்றுகள் எப்போதுமே ஒரு முடிவை அடைந்துவிடுகின்றன” என்கிறார் பிரான்ஸ்வெல்.

சமூகத் தடுப்பாற்றல் என்பது எட்டமுடியாத ஒன்று என்றால் வேறு எதுதான் இலக்கு? “இன்னும் கொஞ்ச காலத்துக்கு, நன்றாக தடுப்பூசி போடப்பட்ட நாடுகளில் வைரஸை ஒழிக்க முடியலாம் அல்லது அம்மைபோல் கட்டுப்படுத்தப்பட்ட அச்சுறுத்தலாக ஆக்கலாம்” என்று ‘தி வொஷிங்டன் போஸ்ட்’டில் ஆஷிஷ் கே.ஜா. எழுதுகிறார். மக்கள்தொகை அடர்த்தி, காற்றோட்டம், முகக்கவசம் அணிதல் போன்றவையும் பெருந்தொற்று வெடிப்புகளுக்கு எதிராக ஒரு சமூகம் தடுப்புக்கவசம் கொண்டிருப்பதைத் தீர்மானிக்கும்.

தடுப்பூசி கிடைப்பதில் ஏழை நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையில் இருக்கும் பெரிய இடைவெளியைக் குறைப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தடுப்பூசிக் காப்புரிமைகளுக்குத் தடைவிதிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தற்போது ஆதரவு தெரிவித்துவருவது அந்தத் திசையில் முக்கியமான நகர்வாகும். அதற்கு உலக வர்த்தக நிறுவனம் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்கிறார்கள் மருத்துவர்கள் கரணும் பார்சானெட்டும்.

ஏற்கனவே சாதாரண ஜலதோஷம் போன்ற வற்றுக்குக் காரணமாக இருக்கும் நான்கு கொரோனா வைரஸ்களைபோல் எதிர்வரும் ஆண்டுகளில் தற்போதைய கொரோனா வைரஸானது பரிணாமம் அடையும். இந்த வைரஸ்கள் மக்களுக்கு அடிக்கடியும் திரும்பத் திரும்பவும் தொற்றினாலும் மிக அரிதாகவே தீவிர உடல்நலக் குறைபாட்டுக்குக் காரணமாகின்றன. குழந்தைகளுக்கு இந்த வைரஸ்கள் தொற்றும்போது அவர்களுக்கு ஓரளவு எதிர்ப்புச்சக்தி ஏற்பட்டு அவர்கள் பெரியவர்களாகும்போது தொற்று ஏற்பட்டால் அதிலிருந்து பாதுகாக்கிறது.

### உசிதமான எதிர்பார்ப்பு

“நமக்கு சமூகத் தடுப்பாற்றல் கிடைக்காது என்று சொல்வது எந்தவகையிலும் மரணதண்டனைத் தீர்ப்பு போலாகாது” என்கிறார் உயிரியல் ஆய்வாளர் ஜென்னி லேவைன். “அப்படியென்றால் அது எப்போதும் இருக்கப்போகிறது என்று அர்த்தம். அப்போது அது தீவிரம் குறைந்தளவில் எப்போதும் இருக்குமா அல்லது தீவிரமாக எப்போதும் இருக்குமா என்ற கேள்வி எழுகிறது? தீவிரம் குறைந்தளவில் எப்போதும் இருக்கும் என்பதுதான் என் கணிப்பு. அதுதான் நடக்கும் என்று உண்மையில் தோன்றுகிறது” என்கிறார் லேவைன்.

அது ஓர் உசிதமான எதிர்பார்ப்பு. அதுவே மோசமான சூழல் என்றால் எப்படி இருக்கும்? பெரும்பாலான வைரஸ்கள் மாற்றுவடிவம் அடைய அடைய அவற்றின் தீவிரம் குறையும். ஆனால், கொரோனா வைரஸ் விடயத்தில் அந்த உத்தரவாதத்தைக் கொடுக்க முடியாது. பி.1.1.7 வேற்றுருவம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இதன் தொற்றுத்திறன் மட்டுமல்ல இறப்பு ஏற்படுத்தக்கூடிய திறனும் அதிகம் என்று பல்வேறு ஆய்வுகள் கண்டறிந்திருக்கின்றன. தற்போதுள்ள தடுப்பூசிகள் பலவும் அந்த வேற்றுருவத்தை எதிர்த்து நன்கு போராடக்கூடியவை என்றாலும் தடுப்பூசி அளிக்கும் கேடயத்தைத் தகர்க்கக்கூடிய வேற்றுருவங்கள் உருவாகலாம்.

இன்னும் உருவாகாத வேற்றுருவங்களுக்கும் எதிராக மக்களுக்குத் தடுப்பு சக்தி அளித்து அவர்களைக் காக்கக்கூடிய தடுப்பூசி ஒன்றை உருவாக்குவதற்குப் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பந்தயமானது பெருந்தொற்று முடிவதற்குள் ஒரு வெற்றிகரமான தடுப்பூசியை நமக்குத் தரும் என்று அமெரிக்க ஜனாதிபதியின் தலைமை மருத்துவ ஆலோசகர் அந்தோனி ஃபாஸி கூறுகிறார்.



நன்றி - ‘தி நியூயோர்க் ரைம்ஸ்’

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைப்பது எப்போது?







இராப் பொழுதொன்றில் எனது அப்பாவை வெள்ளை வானில் கடத்திச் சென்றதாக எனது அம்மா கூறினாள். அந்நாளிலிருந்து ஒவ்வொரு இராப் பொழுது வருகின்ற போதும் எனது அப்பாவை கூட்டிக்கொண்டு சென்றவர்கள் வீட்டில் கொண்டுவந்து விடுவார்கள் எனும் ஏக்கத்தில் வாசல்முற்றத்தில் காத்துக் கொண்டிருக்கிறேன் என்கிறாள் நிஷh. திருகோணமலை கணேஷ; நகரைச் சேர்ந்த நிஷhவிற்கு தற்போது வயது பதினெட்டு ஆகிறது.

நிஷhவின் அப்பா கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது கடத்திச் செல்லப்பட்டார.; நிஷhவைப் போல இன்னும் பலநூற்றுக்கணக்காண குழந்தைகள் மற்றும் கணவன் மனைவிகளும் இவ்வாறு காணாமல் போன தங்களுடைய குடும்ப உறவினர்களுக்காக காத்துக் கொண்டு இருக்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்வர்களது பிரச்சினையானது வடக்கு கிழக்கில் கடந்த 30 வருடங்களாக இலங்கையில் யுத்தம் நடைபெற்று முடிந்த நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர.; இவர்கள் தொடர்பான எவ்வித முடிவோ தகவலோ இற்றைவரைக்கும் கிடைக்கப்பெறவில்லை. இவர்களது குடும்ப உறவினர்கள் இவர்களுக்காக தொடர்ந்தும் போராட்டம் நடாத்திவருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயமானது ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வரை சென்றுள்ளது. வருடாந்தம் ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில் இவ்விவகாரம் விவாதிக்கப்படுகின்ற போதிலும் இதுவரை எந்தவித ஆக்கபூர்வமான தீர்வுகளும் எட்டப்படவில்லை.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 04ஆம் திகதி சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனால் அன்றைய தினத்தை நாம் சுதந்திர தினமாக கருதுவதில்லை ஏனெனில் காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் மீளக் கிடைக்கும் வரைக்கும் சுதந்திர தினத்தினை நாங்கள் கரிநாளாக புறக்கணித்து கறுப்பு பட்டி அணிந்து உணவுத்தவிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றோம்.

தொடர்ச்சியாக எங்கள் உறவுகளை நாங்கள் தேடிக்கொண்டிருக்கின்றோம். பல ஆண்டுகளாக வீதியில் இறங்கி போராட்டம் நடத்தி வருகிறோம். எதிர்வரும் ஐ.நா மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கை அரசிற்கு எந்த கால நீடிப்பும் கொடுக்காமல் எங்களுக்கான நீதியினை விரைவில் பெற்றுத் தரவேண்டும். காணாமல் போன பிள்ளைகளை தேடிய பெற்றோர்கள் தற்போது வயது சென்று இறந்து கொண்டும் போகின்றார்கள் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் தலைவி ம.ஈஸ்வரி தனது கருத்தை தெரிவித்தார்.;

இதேவேளை காணாமல் போனோரின் உறவினரும் சமூக செயற்பாட்டாளருமான எஸ்.பஞ்சலிங்கம் கருத்து வெளியிடுகையில் அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் விடயத்தில் அக்கரையுடன் செயற்பட்டு இவர்களுக்கான உரிய நீதியை விரைவில் பெற்றுக்கொடுக்க வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அனேகமானவர்கள் இலங்கையிலேயே இருக்கின்றார்கள். இவர்களுக்கான நீதி இதுவரைக்கும் கிடைக்கப்பெறவில்லை. இந்த நாட்டில் சட்ட ஒழுங்கு ஒன்று காணப்படுகின்றது. அதற்கு அமைவாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இவர்களுக்கான நீதியை பெற்றுகொள்வதற்காக தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பாக அரசு நீதியினை நிலை நாட்டவேண்டும். உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இருக்கிறார்களா இல்லையா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவாவது சரி இவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்றார்.

தெற்கில் சிங்கள இளைஞர்களின் ஆயதக் கிளர்ச்சியின் போதும்,வடக்கு கிழக்கில் யுத்தம் இடம் பெற்ற காலத்தின் போதும் ஆயிரக்கணக்காண இளைஞர் யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள.; இவர்களில் கணிசமானோர் அரச படைகளாலும் தமிழ் ஆயுதக் குழுக்களாலும் கடத்தி காணாமல் ஆக்கப்பட்டதாக பரவலாக குற்றம் சாட்டப்படுகின்றது.

இத்தகைய குற்றச்செயல்களை விசாரிக்க கடந்த கால அரசாங்கங்களால்; பல ஆணைக்குழுக்ளும் பொறிமுறைகளும் நிறுவப்பட்டன. எனினும் குறித்த ஆணைக்குழுக்கள் தமது கடமையினை சரிவர மேற்கொள்ளவில்லை. என அதைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை 1996 இல் வெளியிடப்பட்ட ஐ.நா அறிக்கையின் படி 1980-96 காலப்பகுதியில் இலங்கையில் 11,513 பேர் காணாமல் போய் உள்ளனர். இது உலகில் ஈராக்குக்கு அடுத்தபடியான இரண்டாம் நிலை ஆகும். 1999 ஆசிய மனிதவுரிமை ஆணையகத்தின் அறிக்கை ஒன்றின் படி, அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 16,742 முறைப்பாடுகளுக்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத வழக்குகள் இருக்கின்றன. அதன் பிறகு நடத்தப்பட்ட ஆள்கடத்தல்களும் காணாமல் போதல்களும் இந்த எண்ணிக்கையை ஆயிரக்கணக்கில் அதிகரித்திருக்கும.; இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் இலங்கைத் தமிழர்கள் ஆவர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் உருவாக்கப்பட்டது (முஆP). இந்த அலுவலகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு 2018 ஆவணி 30 ஆம் திகதியன்று காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோரின் 650 குடும்ப உறுப்பினர்களின் பங்குபற்றுதலோடு நடைபெற்றது. இலங்கையில் நல்லிணக்கத்தை எட்டுவதற்கு காணாமற்போன மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் குடும்பங்களுக்கு நீதியை பெற்றுக் கொடுத்தல்; எனும் குறிக்கோளின் அடிப்படையிலேயே இந்த அலுவலகம் உருவாக்கப்பட்டது.

காணாமல் போனோர்களை உறுதிப்படுத்தி அவர்களுக்கான சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல், காணாமல் போனோர்களின் குடும்பங்களுக்கான சேவைகளையும் நலன்களையும் வழங்குவது ஆகியனவும் இந்த அலுவலகத்தின் பணிகளாகும்.

முன்னால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய முறைப்பாடுகளை தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு (ஆNஐசு), இடம் கையளிக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். இதற்கமைய தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு (ஆNஐசு)இ முஆP அலுவலகத்திடம் 14,641 விண்ணப்பங்களைக் கையளித்தது.

இவ்விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டு காணாமல்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பட்;டியல் ஒன்றை முஆP உருவாக்கியுள்ளது. இப்பட்டியலை அதன் இணையத்தளத்தில் அணுக முடியும். இது எதிர்கால விசாரணையின் போது உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும் புதிய அரசாங்கம் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்வதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துவதாக தெரியவில்லை. எதிர்காலத்தில் இந்த அலுவலகமும் கைவிடப்படுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன.

இதேவேளை அரசாங்கங்களின் மேற்படி செயற்பாடுகள் அனைத்தும் வெறும் கண்துடைப்பே என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் திருகோணமலை மாவட்ட தலைவி ஆஷh நாகேந்திரன் தனது கருத்தை கூறுகையில் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் வித்தை போன்று இலங்கை அரசாங்கத்தால் எங்களை ஏமாற்ற முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு நடைபெறும் போது சர்வதேச சமூகத்தை சமாதானப்படுத்த இலங்கை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு மாயைதான் காணாமல் போனவர்களுக்கான ஒரு அலுவலகமாகும். இதன் மூலமாக எமக்கு உதவுவது போன்று காட்டிக் கொள்வது சர்வதேச சமூகத்தினை ஏமாற்றுவதற்கான முயற்சியே என்றும் அவர் தெரிவித்தார்.

பத்து வருட காலமாக போராடியும் இலங்கை அரசாங்கம் இதுவரை காலமும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் எதுவித பதிலும் வழங்காத நிலையில் சர்வதேசமாவது நியாயமான பதிலை கூற வேண்டும் எனக் கோரியே ஒருவருடத்திற்கும் மேலாக தொடர் போராட்டத்;தை தாம் நடாத்தி வருவதாகவும்; ஆஷh நாகேந்திரன் குறிப்பிட்டார்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்து வரும் சமூக ஆர்வளரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான த.சசிதரன் கருத்து தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தரவுகள் சரியான முறையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கப்படவில்லை. இதனை அண்மையில் நடந்த ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் அறிந்து கொள்ள முடிந்தது. இத்தரவுகளை சர்வதேசம் வரைக்கும் கொண்டு செல்வதற்கான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க தயாராக உள்ளோம் என அவர் மேலும் கூறினார்.

அண்மையில் வட மாகாண சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியாளர்களுக்கான இணையவழிக் கலந்துரையாடலில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறை வேற்றுப்பணிப்பாளர் யஸ்மின் சூக்கா கருத்து வெளியிடுகையில் இலங்கை அரசாங்கமானது கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றங்களை உள்நாட்டில் விசாரணைக்கு உட்படுத்தி வழக்குத் தொடர்வதற்கான முதன்மையான பொறுப்பினைக் கொண்டிருக்கின்ற அதேவேளையில் அதனைச் செய்ய இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என்பதனை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் ஏற்றுக்கொள்கிறது. இலங்கையானது பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான விருப்பத்தைக் கொண்டிருக்காமையே சர்வதேச சமூகம் அவ்விடயத்தை கையிலெடுத்திருப்பதற்கான முக்கிய காரணமாகும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வேறு வழியில்லாமல் இராணுவத்திடம் சரணடைந்த 280 பேர்களின் புகைப்படங்களும் அவர்கள் தொடர்பான விபரங்களும் ஐவுதுP என்ற இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் காணாமல்போனோர் அலுவலகம் தனது விசாரணைகளை ஆரம்பிக்கும்போது இவர்களின் நிலைப்பாடு குறித்தும் கவனத்திற்கொள்ள வேண்டும் என நாம் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவருக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளோம்.

அத்துடன் காணாமல்போனோரின் உறவுகளின் சாட்சியங்களை நாம் பெறும்போது அவர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். காணாமல்போனோர் விடயத்தில் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியான புறக்கணிப்புப் போக்கை கடைப்பிடிக்குமானால் இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்வதன் மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுப்போம்; என்றார்.

இவ்வாறு இலங்கையில் காணாமல்போனோர் தொடர்பான விவகாரமானது கடந்த ஒரு தசாப்பத்திற்கும் மேலாக தீர்வு காணப்படாத ஒரு சர்ச்சையாகவே தொடர்கிறது. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களும் இதற்கு தீர்வு காண்பதில் இதய சுத்தியுடன் செயற்படுவதாக தெரியவில்லை. இதற்கென கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட உள்நாட்டு பொறிமுறைகளும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. ஐ.நா உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சர்வதேச பொறிமுறை ஒன்றின் மூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்ற போதிலும் அதற்கு இலங்கை அரசாங்கம் உடன்பட மறுக்கின்றுது. இவ்வாறான சிக்கலுக்கு மத்தியிலேயே நிஷh போன்ற நூற்றுக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஏக்கங்களுடன் தீர்வுக்காக காத்திருக்கின்றனர். இவர்களுக்கு சரியான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்வர வேண்டும். இதற்கான அழுத்தங்களை தமிழ் அரசியல் தலைமைகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டளர்களும் அரசுக்கு வழங்க முன்வர வேண்டும்.

**Aashik wadood**
**ஆஷிக் வதூத்**

## தமிழன் தொடர்கதை

# மகள் தூங்குகிறாள்



## அத்தியாயம் -26

**- ஸாலிஹ் அஸீம்**

அதனைக் கேட்ட ரொமேசிகாவின் தங்கை

‘‘ஆமாம் அங்கிள்.

வீட்டுக்குத்தான் போகிறோம்” என்றாள். அதனைக் கேட்ட நிசாந்த

‘‘அப்படியென்றால் சரி... வந்து ஓட்டோவுல ஏறுங்க.

அந்த வழியால்தான் நானும் வீட்டுக்குப் போகிறேன்.

போகிற வழிதானே..!

அவ்விடத்தில் உங்களை இறக்கி விட்டுவிட்டுப் போகிறேன்” என்று சொன்னதும்

ரொமேசிகாவும், அவள் தங்கையும் என்ன செய்வதென்று தெரியாமல் மீண்டும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர். அதனைக் கண்ட நிசாந்த அவர்கள் யோசிப்பதைக் கண்டு

‘‘என்ன யோசிக்கிறீங்க..?

ஒன்னும் யோசிக்காதீங்க.

பயப்படாமல் நீங்க வாங்க... அந்த வழியாலதான் நானும் போகிறேன்.

அந்த இடத்தில் உங்களை இறக்கிவிட்டுப் போகிறேன். அவ்வளவுதான்.

இதற்கு எதற்கு வீணாக பயப்படுறீங்க..?’’ என்றான் நிசாந்த.

அதனைக் கேட்ட ரொமேசிகாவின் தங்கை

‘‘அக்கா, நேரம் போகுது அக்கா...

என்னக்கா ஓட்டோவுல போவோமா..?” என்றாள்.

அதைக் கேட்ட ரொமேசிகா ‘‘தங்கை சொல்வதும் சரிதான்...” என்று தன்னுடைய மனதிற்குள் நினைத்துக் கொண்டு

‘‘சரி போவோம்..!” என்பது போல் தலையசைத்தாள் ரொமேசிகா.

அதன் பின்னர் இருவரும் ஓட்டோவில் தயங்கித் தயங்கி ஏறிக் கொண்டனர். பின்னர் ஓட்டோ புறப்பட்டுப் போனது.

அவ்வாறு ஓட்டோ போகும் போது அவர்களைப் பார்த்து

‘‘என்ன தங்கச்சி..! உங்களோட அக்கா ஏதும் பேசமாட்டாங்களாக்கும்..?

இவ்வளவு நேரமாயும் நாங்க ரெண்டு பேரும்தான் பேசிக்கிட்டிருக்கோம். அவுங்க எதுவுமே பேச மாட்டேங்குறாங்க.

ஏதாவது கோபமா..?

அப்படியும் இல்லாட்டி நானென்ன பேயா..? பிசாசா..?” என்றான் நிசாந்த சிரித்துக் கொண்டே.

ஆனாலும், நிசாந்த சொன்னதைக் கேட்டும் கேடகாதது போல் இருந்து விட்ட ரொமேசிகா ஏதும் பேசவில்லை. வாய் மூடிக் கொண்டு

மௌனமாகவே இருந்து விட்டாள்.

இப்படியே சில நாட்கள் நிசாந்த போகும்போது ரொமேசிகாவையும், அவள் தங்கையையும் ஏற்றிக் கொண்டு போவதும், அதுபோன்றே அவன் திரும்பி வீட்டுக்கு சாப்பிட வரும்போது பாடசாலையும் அதே நேரத்தில் முடிவடைவதால், அவர்கள் வரும் அந்த வழியால் வரும் நிசாந்த அந்த நேரத்தில் அவர்களைக் கூட்டி வருவதுமாக அந்தச் செயற்பாடு ஒவ்வொரு நாளும் வழமையாகி விட்டது.

இப்போதெல்லாம் கதைக்காமல் மௌனமாயிருந்த ரொமேசிகாவும் காலத்தின் மாற்றத்தாலும், தினமும் நிசாந்தவின் ஓட்டோவில் போய்ப் பழக்கப்பட்டு விட்டதாலும், நிசாந்த மீது அதீத நம்பிக்கை வந்ததாலும் நிசாந்தவோடு ரொமேசிகாவும் சரளமாகக் கூச்சமின்றி கதைக்கத் தொடங்கி விட்டாள்.

அதுமட்டுமில்லாமல், நிசாந்த சொல்லாமலேயே ஓட்டோவை நிறுத்தியதும், அவன் அழைக்காமலேயே ஓட்டோவில் ஏறிக் கொள்வதும் இறங்குவதுமாக அவர்களின் அந்த நட்பு காலப்போக்கில் நகமும், சதையினையும் போன்று மிகவும் இறுக்கமாகவும், நெருக்கமாகவும் மாறிப் போய் விட்டது.

இப்படியே ரொமேசிகா மற்றும் நிசாந்தவுக்கிடையிலான அன்பு அவர்களை அறியாமலேயே அவர்களை ஆக்கிரமித்து வளர்ந்து விட்டது.

இவ்வாறு இவர்கள் இருவரினதுமான நெருங்கிய நட்பு தங்குதடையின்றி சீராகத் தொடர்ந்து கொண்டிருந்தபோதுதான்

அன்றொரு நாள் ரொமேசிகாவின் தங்கை பாடசாலைக்கு வரவில்லை என்பதால் அன்று ரொமேசிகா மட்டுமே தனியாகப் போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அப்போது அங்கே வந்த நிசாந்த ரொமேசிகா மட்டும் தனியே வருதைக் கண்டுவிட்டு

‘‘என்ன ரொமேசிகா இன்றைக்கு நீங்கள் மட்டும் தனியாக வந்திருக்கீங்க..?

எங்கே உங்களுடைய தங்கச்சியை இன்றைக்குக் காணவில்லை?

ஏதாவது பிரச்சினையாயிடுச்சோ?

அப்படியில்லாட்டி ஏதாவது சுகமில்லையா..?

இப்படி நீங்கள் மட்டும் தனியாக எப்போதாவது வந்திருக்கீங்களா..?

அப்படி நீங்க தனியா வந்தது இல்லைதானே..?

அதனால்தான் நான் கேட்டேன். வேறு ஒன்றுமில்லை.” என்றான்.

அதனைக் கேட்ட ரொமேசிகா நிசாந்தையைப் பார்த்து

‘‘அவளுக்கு நேற்றிலிருந்து ரொம்பவும் காய்ச்சல் காயுது. தலைவலி வேறு.

அதுவுமில்லாமல் போதாக்குறைக்கு வாந்தி வேற எடுத்தாள்.

அதனாலதான் அவள் இன்றைக்கு வரவில்லை. இன்றைக்கு பரீட்சை வேறு. வேறு வழியில்லை.

அதனாலதான் நான் மட்டுமாவது வருவோமுனு தனியாகவே வந்திட்டேன்.” என்ற ரொமேசிகாவின் வார்த்தையை கேட்ட நிசாந்த

‘‘அப்படித் தனியாக போகத்தான் உங்கட அம்மா விடமாட்டாங்களே..!”

என்றான் ரொமேசிகாவின் நிலமையை தெரிந்து வைத்திருந்த நிசாந்த. அதனைக் கேட்ட ரொமேசிகா

‘‘உண்மைதான். நீங்கள் சொன்னது மாதிரி என்னையும் தனியாக ஸ்கூலுக்கு அனுப்ப முடியாது என்றுதான் எனது அம்மா சொன்னாங்க.

இன்றைக்கு ஸ்கூலுக்கு போக வேணாம்னு சொன்னாலும் நான் கேட்கவில்லை.

இருந்தாலும் என்ன செய்றது?

நான் ஒரு மாதிரி அம்மா கிட்டே கதைச்சிட்டு சமாளிச்சிட்டு வந்திட்டேன்” என்றாள் ரொமேசிகா

‘‘ஏன்..? எதுக்காக நீங்க போறீங்க..?

அப்போ எதுக்கு நீங்க அம்மா போக வேணாம்னு சொல்லியும் கூட நீங்க வந்தீங்க..?

நீங்களும் போகாமலிருந்து இருக்கலாம்தானே?” என்றான் நிசாந்த ரொமேசிகாவின் முகத்தை உற்றுப் பார்த்தபடி.

அதனைக் கேட்ட ரொமேசிகா

‘‘அப்படி இல்லேங்க..!

நீங்க நாங்க இன்னும் வரயில்லனு யோசிச்சுக்கிட்டு தேடிக்கிட்டு இருப்பீங்கனுதான்

நான் மட்டும் ஸ்கூலுக்குப் போறதுக்காக தனியே வந்தேன்.

சொல்லப்போனால் நான் உங்களுக்காகத்தான் வந்தேன்” என்றாள் ரொமேசிகா தனது தலையைக் குனிந்தபடி.

‘‘அப்படியா விஷயம்?

அது தெரியாதே எனக்கு.

ம்..! அப்படியென்றால் என்மேல உங்களுக்கு கொஞ்சம் சரி அக்கறை இருக்குது போல..!

அதைக் கேட்க எனக்கு சந்தோஷமா இருக்குது”

என்றான் நிசாந்த

‘‘ச்சே..! ச்சே...!! அப்படியெல்லாம் ஒன்னுமில்லை..!

நீங்க எங்களைத் காணயில்லேனு தேடுவீங்கனு நெனைச்சுத்தான் வந்தேன்.

சரியில்லேயேனு சும்மாதான்

மற்றபடி ஒன்னுமில்லை”

என்றபடி முகத்தை தன் கரங்களால் மறைத்தபடி வெட்கத்தில் முகம் சிவக்க நாணிக்கோணி நெளிந்தாள் ரொமேசிகா.

அதனைக் கேட்ட நிசாந்த

‘‘ஆமாம்..! நீங்க சொன்னதை நாங்க நம்பிட்டோம்..!” என்றான் சிரித்தபடி கிண்டலாக.

**தொடரும்...**

---

## தமிழன் சிறுகதை



# இரத்தத் துளிகள்....

திருமணமாகி இரண்டு வருடங்களிலேயே மனைவியை இழந்து ஆம்பியூலன்ஸ் வண்டி சாரதியாக கடமை புரியும் ரமணாவின் ஒரே மகளான ராகினி அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள்,

அந்த ஊரின் அழகு தேவதையென்று தனிப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டவள் அவள்.

அதிகாலையில் சூரியன் உதிக்கும் முன்னரே கண் விழித்து, வீட்டு வேலைகள் அனைத்தையும் முடித்து, அப்பாவிற்கு உணவு தயார்செய்து கொடுத்து விட்டுத் தானும் கல்லூரிக்குப் போவதை வழமையான ஒன்றாகக் கொண்டிருந்தாள் ராகினி.

ரமணாவிற்கு மனைவியில்லை என்ற குறையையும், ராகினிக்கு அம்மா இல்லை என்ற குறையையும் இருவரும் ஒருபோதும் ஒருவருக்கொருவர் கொடுத்ததே இல்லை. அப்படியாகவே ராகினி படிப்பிலும், அழகிலும் சிறந்தவள் என்று பெயரெடுத்தது மட்டுமல்லாமல் துணிவான பெண் என்றும் எல்லோராலும் அழைக்கப்பட்டாள்,

அன்று கல்லூரி விடுமுறை நாள் என்பதால் அப்பாவிற்கு உணவு கொடுத்து வேலைக்கு அனுப்பி விட்டு, வீட்டு வேலைகளையும் முடித்து தன் தோழிக்கு தொலைபேசி அழைப்பெடுத்து பேசிக்கொண்டிருந்தாள்.

அந்த வேளை கதவைத் தட்டும் சத்தம் கேட்கவே தோழியிடம்

“யாரோ கதவைத் தட்டுகிறார்கள். போய்ப் பார்த்து வருகிறேன்.

லைன்லயே இரு”

என்று கூறியவள் கைபேசியை அந்த இடத்திலேயே வைத்து விட்டு கதவை நோக்கிப் போனாள். அங்கே கதவினருகில் சென்று ‘‘யார்?’’ என்று கேட்கவே

“ராகினி... நான் உங்க அப்பாவின் நெருங்கிய நண்பன். இருவரும் ஒரே வேலைதான் செய்கிறோம். கதவைத் திறக்க முடியுமா..?’’

என்றதும் அப்பாவின் நண்பர் மட்டுமல்லாமல் தன் பெயரையும் கூறுகிறார் என்று உறுதி செய்த ராகினி கதவைத் திறந்து அவரை

‘‘வாருங்கள் அண்ணா’’ என்று உள்ளே அழைத்து ‘‘என்ன விடயம்?’’ என்று கேட்டாள். அதற்கு வந்தவர் ‘‘அப்பாவிற்கு ஏதோ கடிதமொன்று வந்திருக்கு. அதுதான் கொடுத்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்’’

என்று ஒரு கடித உறையைக் கொடுத்தார்.

உறையை வாங்கி வைத்தவள் ‘‘எங்கிருந்து வாரீங்க?’’ என்று கேட்க

‘‘நான் இங்க பக்கம்தான். நேரா வந்து கொடுத்திட்டுப் போகலாம் என்று வந்தேன்’’ என்றதும்,

பயணக்களைப்பு அடைந்திருப்பார் என்றெண்ணி

“அண்ணா... கொஞ்சம் இருங்க ஏதும் குடிக்கக் கொண்டு வாரேன்’’ என்று கூறிவிட்டு சமையலறை நோக்கிச் சென்றாள்.

அந்தவேளை அழகான ராகினியை அடைவதற்கு சாதகமான நேரம் தேடிய அந்தக் காமுகன் அவள் பின்னால் சென்று அவளைக் கட்டிப்பிடித்து தன் காம இச்சைக்கு உட்படுத்த முயற்சிக்கவே ‘‘காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்...’’ என்று உரத்த குரலில்

ராகினி சத்தமிடவே அவள் வாயை சத்தம் வெளிவராதபடி அவன் அடைத்து விட்டான்.

தன் தோழியின் குரல்

‘‘காப்பாற்றுங்கள்’’ என்று கைபேசியின் தொடர்பைத் துண்டிக்காமலிருந்த தோழிக்குக் கேட்டதும் பயந்து போய் உடனே ராகினியின் அப்பா ரமணாவுக்கு அழைப்பை மேற்கொண்டு

“அங்கிள்..! வீட்டில் ராகினி ஏதோ ஆபத்தில் இருக்கிறாள். யாரோ வந்திருக்கிறாங்க அங்கிள்..! சீக்கிரமாகப் போய்ப் பாருங்கள்..!”

என்று கூற வேகமாக ஆம்பியூலன்ஸ் அபாய ஒலியைக் கதற விட்டபடி வீட்டை நோக்கி வேகமாக செலுத்திய ரமணா, திறந்திருந்த தன் வீட்டிற்குள் ஓடி வந்து நுழையும்போது அங்கே இரத்தத் துளிகள் ஒன்று சேர்ந்து வெள்ளமாக சமையலறையிலிருந்து வாசலை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தது.

அந்தவேளை சமையலறையை நோக்கிப் பார்க்கவே தன் ஆசை மகளின் ஆடையில் கிழிபட்ட சிறு துண்டு அவர் முன்பாக பறந்து வரவே தன் மகளுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்று ஊகித்தபடி

அந்த வீட்டு வாசலிலிருந்து தலையைக் கையால் அடித்து

“இந்த நிலைமையில் நான் பார்க்க மாட்டேன்..! பார்க்க மாட்டேன்..!”

என்று சத்தமிட்டு அழ ஆரம்பித்தார்.

அவரின் அழுகுரல் கேட்டு என்ன ஆயிற்று என்று ஒன்றும் புரியாத அக்கம் பக்கத்தவர்கள் அனைவரும் வீட்டை நோக்கி ஓடி வந்தார்கள். அப்போது அழுது கொண்டிருந்த அவர் தோளில் கை வைத்து

“அப்பா... அப்பா...” என்று அழைக்கவே அழுதபடி நிமிர்ந்து பார்த்தவர் திகைத்துப் போய் உடனே எழுந்து கட்டித் தழுவி

“ராகி... ராகி... உனக்கு ஒண்ணும் இல்லையாம்மா” என்று கை, கால்களைப் பிடித்துப் பார்த்து மனமகிழ்ச்சியில் அணைத்து முத்தமிட்டார்.

‘‘எப்படி அப்பா இந்த நேரத்தில் வந்தீர்கள்?’’ என்று ராகினி கேட்கவே ‘‘உன் தோழிதான் நீ ஏதோ ஆபத்தில் இருப்பதாகவும், யாரோ வந்ததாகவும் சொன்னாள். அதுதான் வேகமாக வந்தேன். இது என்ன இரத்தம்? என்ன நடந்தது? யார் வந்தது?’’ என்று ரமணாவும் கேட்க ஆரம்பத்தில் என்ன நடந்தது என்று கூறியவள் தொடர்ந்து ‘‘நான் அவனுக்கு கோப்பி போட்டுக் கொடுக்கலாம் என்று சமையலறைக்குள் போனேன்.

எனக்குத் தெரியாமல் பின்னே வந்தவன் என்னை இறுகக் கட்டிப்பிடித்தான்.

அந்த வேளை காப்பாற்றுங்கள் என்று உரத்து சத்தமிட்டேன். அதுவே தோழிக்கு கேட்டிருக்கிறது. அந்தக் காமுகன் என் சத்தம் வராதபடி வாயைப் பொத்தி விட்டான். பிறகு என்னை நெருங்கி கற்பைப் பறிக்க முயன்றான். எவ்வளவோ முயன்று பார்த்தேன் அவனிடமிருந்து தப்பித்துக் கொள்ள. ஆனால், அவன் பலம் என்னை அடக்கி விட்டது. மேலும் முயன்ற நான் கையை உணவு மேசையில் வைத்தபோது அதிலிருந்த கத்தி என் கைக்குள் அகப்படவே, வேறு வழியேதுமில்லாமல் என்னைக் காப்பாற்றிக் கொள்ள அவனைக் கத்தியால் குத்தி விட்டேன்’’ என்று கையிலிருந்த கத்தியைக் காட்டும்போதே அயல் வீட்டார் வீட்டிற்குள் நுழைந்தார்கள். அந்தக் கணமே ராகினியின் கையிலிருந்த கத்தியை அவர்கள் பார்க்கும் முன்பாகவே பறித்து ‘‘நானே கொலை செய்தேன். என் மகளை சீரழிக்க வந்தான். வேறு வழி தெரியாமல் கொன்று விட்டேன்’’ என்று வந்தவர்கள் முன்பு கூறி தன்னில் பழியை ஏற்றுக்கொண்டு தன் ஒரே மகளின் வாழ்க்கைக்காக தன்னையே இழந்து மகளைக் காத்து நின்றார் அந்த அரணான அன்புத் தகப்பன்.

பத்து மாதம் சுமக்கும் தாயிடம் நெருங்கும் நாமோ தன் உயிர் உள்ளவரை சுமக்கும் தந்தையிடமிருந்து ஏனோ விலகி நிற்கிறோம்...

அவர் அருமை நமக்கோ இன்று வரை புரியாமல்...

**வன்னித்தமிழ் மறவன்**

# இலக்கிய சங்கமம்

sangamamjeeva@gmail.com ஜீவா சதாசிவம்



**ஊடகவியல், புகைப்படத்துறை, கலைஞர் என பல்பரிணாமம் கொண்டவர் எல்றோய். யாழ். புனித ஜோன் பொஸ்கோ, யாழ். புனித பத்திரிசிரியார் கல்லூரி, கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம், மன்னார் புனித சவேரியார் கல்லூரி, மட்டு. புனித மிக்கேல் கல்லூரி இன்னும் பெயர் குறிப்பிட முடியாத கட்டிடங்களற்ற பாடசாலைகளில் பல மரங்களுக்கு கீழேயும், நிலத்தடி பங்கர்களுக்கும் படித்த இவர், இன்று ஊடகத்துறைசார் கல்வியில் முதுநிலை பட்டதாரி.**

**தொழில்நுட்பம் மற்றும் கணினி பொறியியலிலும் ஈடுபாடு அதிகம். புகைப்பட நிபுணத்துவம் கொண்ட இவர், பயிற்றுவிப்பிலும் ஈடுபட்டு வருகின்றார். பகுதிநேரங்களில் ஊடக கற்கைகளுக்கான விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார்.**

**இசைத்துறைக்கான ஜனாதிபதி விருது, நுண்கலை மற்றும் பத்துக்கும் மேற்பட்ட தேசிய விருதுகள், சமூக சேவை மற்றும் தலைமைத்துவத்துக்கான மகாத்மா காந்தி விருது, கலைமாமணி விருது, பல்கலை தென்றல், சிறந்த இளைஞருக்கான விருது (3 வருடங்கள் தொடர்ச்சியாக). சாதனை இளைஞர் விருது என பல விருதுகளைப் பெற்றவர்**

# கலைக்கு மொழி எல்லை கிடையாது

## கலைஞர் எல்றோய் அமலதாஸ்

உரையாடல்: ராம்ஜீவா

சிறுபராயத்தில் கலைமீதான ஈடுபாடுகள் அதிகமாக இருப்பதற்கு தந்தை சூசைப்பிள்ளை அமலதாஸுடன் பயணித்த வாழ்க்கைதான் காரணம் என்பேன். அப்பா உதவி கல்விப் பணிப்பாளராக பணியாற்றியதுடன், இசை, கலை மற்றும் இலக்கியத்துறைகளில் அதீத ஈடுபாடும், திறமையும் கொண்டவர். குடும்பத்தவர்கள் அனைவரிடத்திலும் இசை சார்ந்த நாட்டம் அதிகம். அந்தச் சூழ்நிலையும், எனது தனிப்பட்ட நாட்டமும் கலை மேல் பற்றுக்கொள்ள வைத்தது.

குடும்பச் சூழலும் பாடசாலை சூழலும் புதிய சிந்தனைகளையும், படைப்பாக்களையும் வியாபிக்கத் தூண்டின. எனது பாடசாலைகளையும் ஆசிரியர்களையும் நண்பர்களையும் கூட நன்றியுடன் நினைக்கின்றேன் எனக்கூறும் கலைஞர் எல்றோய் அமலதாஸ் யுத்தங்களும் ஓயாத இடம்பெயர்வுகளும் எமக்கு கற்றுக்கொடுத்தவை ஏராளம் என்கிறார். தனது கலைப்பயணம் தொடர்பில் 'தமிழன் இலக்கிய சமங்கமம்' பகுதிக்கு அவர் அளித்த செவ்வி,

**இசைத்துறையிலா அல்லது நடிப்புத் துறையிலா உங்களுக்கு அதிக ஆர்வம்?**

ஆயகலைகளில் அதீத ஆர்வம் எப்போதும் இருக்கும். ஆனால், 'இசை' என்பது - குழந்தைப்பருவம்முதல் வாத்தியங்களை பலவற்றை இசைக்கும் ஆர்வம் இயல்பாகவே எனக்குள் இருந்தது. சிறுபராயத்திலேயே இசைத்துறைக்கான ஜனாதிபதி விருது மற்றும் தேசிய விருதுகள் பலவற்றை பெற்றுக்கொண்டேன். அந்த வரவேற்பு வாழ்க்கையில் அங்கமாகிப்போன இசையால் பல்வேறு அங்கீகாரங்கள் மற்றும் விருதுகளுக்கும் வழிசமைத்தது. எனக்கான ஆற்றுப்படுத்தல்களுக்கும் இசைக்கான பங்கு மிகப்பெரியது.

'நடிப்பு' என்பது - கதைக்கான கதாபாத்திரத்தில் நான் என்ற பிம்பம் மாத்திரமே. கொடுக்கப்பட்ட பணிகளை மனநிறைவோடு செய்தேன். கிடைக்கப்பெற்ற பாராட்டுகளும், அன்பும் நம்பிக்கையூட்டின.

**இலங்கைத் தமிழ் சினிமாவை விட சிங்கள சினிமாவிலேயே காத்திரமான பாத்திரங்களை ஏற்றுள்ளீர்கள்... இதுபற்றி?**

அனைத்து வாய்ப்புகளும் பொருத்தமான கதை மற்றும் களங்களுக்கானது. எல்றோய் இதில் நடித்தால் சிறப்பாக இருக்கும் என்று வழிமொழிந்தவர்களும், ஏற்றுக்கொண்டவர்களுக்குமான தெரிவு அது. அவர்களது நம்பிக்கைகளே திரைப்படங்களாக என்னை இலங்கை தேசத்தின் வெள்ளித்திரையில் பிரதிபலிக்க வைத்தது. அத்தோடு கலை என்பது மொழிக்குள் கட்டுப்படுத்திக்கொள்வதல்ல. நாமும் எல்லை கடந்து பயணிக்க வேண்டும். அந்தப் பயணத்தில் சமூக பொறுப்புணர்வு மற்றும் வரலாறுகளின் நேர்மையும் இருக்கவேண்டும் என்பதை நான் விரும்புபவன். ஆதலால் ஏற்றுக்கொள்வதற்கான கள யதார்த்தத்தை தெளிவாக எனக்குள் நடைமுறைப்படுத்தும். புதிய வாய்ப்புகளும் அவ்வாறே!

**இதுவரை பல பாத்திரங்களில் காட்சியளித்துள்ளீர்கள். அதில் உங்களது மனதை ஈர்த்ததாக நீங்கள் கருதுவது?**

கண்டி இராசதானியை ஆட்சிசெய்த ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனின் வாழ்க்கை வரலாற்றை பிரதிபலிக்கும் வகையில் இயக்குனர் தேவிந்த கோங்கஹகேயின் 'கிரிவெசிபுர' என்ற திரைப்படத்தில் நடித்த மன்னன் முத்துசாமி என்ற கதாபாத்திரம் மிகவும் ஈர்த்தது. இலங்கையில் அதிக பொருட்செலவில் சிறப்பாக தயாரிக்கப்பட்ட சரித்திர கதை கொண்ட திரைப்படம் இது.

**இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள் பலர் சிங்கள சினிமாவின் மூலமே புகழடைகின்றார்கள். இது பற்றி உங்களது பார்வையில்?**

எமது கலைஞர்கள் எங்கே புகழடைந்தாலும் பெருமைக்குரியது. கலைகளுக்கு ஏது எல்லைகள். தமிழ்க் கலைஞர்களைப் பொறுத்தவரையில் எமது நிலம்சார்ந்த சூழலில் கிடைக்கின்ற வாய்ப்பும், பொருளாதாரமும் மிகக்குறைவு. காரணங்கள் யாவரும் அறிவீர்கள். நீண்ட கொடிய யுத்தங்கள், தென்னிந்திய சினிமாவின் தாக்கங்கள், தயாரிப்பு முதலீட்டு பற்றாக்குறை என்று பல இருக்கின்றன. இருந்தும் வெற்றிகரமான - சிறப்பான படைப்புகளும் வெளிவருகின்றன.



**சிங்கள சினிமாவின் வளர்ச்சி நீட்சி கண்டு கொண்டிருக்கும்போது இலங்கைத் தமிழ் சினிமா ஏன் அந்த எல்லையைத் தொட இயலாதுள்ளது என்பது பற்றி உங்கள் கருத்து என்ன?**

சிங்கள சினிமா என்பது இலங்கையில் மாத்திரமே உள்ளது. இங்கே எந்த படைப்புகளைச் செய்தாலும் தமக்கான படைப்புகளாக கொண்டாட அந்தச் சமூகம் தயாராக இருக்கின்றது. ஆனால், தமிழ் மொழியும் தமிழர்களுடைய பரம்பலும் வேறு. உலகம் பூராவும் பல கோடியாக வியாபித்திருக்கின்றோம். எனவே, இந்த அனைத்து தமிழர்களையும் சினிமா தொழிற்றுறையில் சிறந்து விளங்குகின்ற தமிழகம் பிரநிநிதித்துவப்படுத்துகின்றது. இது மிகப்பெரிய வர்த்தகம். மிகப்பெரிய தொழில்நுட்பம். பல்லாயிரக்கணக்கான உழைப்பாளர்கள். இதன் ஆதிக்கம் இலங்கை மாத்திரமல்ல. தமிழர்கள் அதிகமாக வாழக்கூடிய இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர், மியன்மார் மற்றும் உலக நாடுகள் அனைத்திலும் தாக்கம் செலுத்தவல்லது.

இந்திய சினிமாவின் பாதையை பிரதிபண்ணுவதால் இலங்கைத் தமிழர்களின் படைப்புகளுக்கான தனித்துவமும் சிதறடிக்கப்படும். ஆகவே, எமது வாழ்வியல், எமது வழக்க மொழி, எமது சூழலை யதார்த்தமாக 'எங்கள் சினிமா' எனும் ஊடகத்துக்குள் கொண்டுசென்றால் எங்களுக்காக வளர்ச்சி நாளடைவில் நீட்சியாகும்.

தமிழர்கள் இலங்கை சினிமாவை உச்சம் தொடவைத்த காலம் ஒன்று இருந்தது. கடந்த காலங்களில் புரையோடிப்போன இனப்பிரச்சினையும் தமிழர்களை பல மட்டங்களில் பலவற்றை இழப்பதற்கு காரணமாக அமைந்தது. வெறும் சினிமாத்துறையை மாத்திரம் குறிப்பிடவில்லை.

இலங்கை சினிமாவை தமிழர்கள் ஆண்ட சரித்திரங்களும் கடந்த தசாப்தங்களில் உள்ளன. இங்கே தமிழ் படைப்புகளை ரசிக்கின்ற பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களும் வாழ்கின்றார்கள். காலச்சூழல் வெற்றிகரமாக மாற்றமடையும்போது நவீன சிந்தனைமிக்க தமிழ்க் கலைஞர்களின் படைப்புகள் இலங்கையின் அனைத்து தரப்புகளிடையே சென்றடைந்து பேசுபொருளாகும் என்பது எனது நம்பிக்கை.

**தொழிற்றுறை ஊடகவியலாளராக இருந்து கொண்டு கலைத்துறையில் பயணிப்பதில் ஏதும் சிரமங்கள் உண்டா?**

சிரமங்கள் ஏதும் இல்லை. தொழில்சார் நடவடிக் கைகளுக்கு முகாமைத்துவமும், அர்ப்பணிப்பும் எப் போதும் அவசியம். பரந்துபட்ட நாழிகையை நாம் எவ் வாறு செதுக்கிக்கொள்ள வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும். இயலாமையின் வெளிப்பாடு களே நேரமின்மை. இங்கே நேரங்களும் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். சக மனிதர்களோடு பயணிக் கின்ற அனைத்து சூழலிலும் எமக்கான அர்ப்பணிப்பில் உயிரோட்டம் இருந்தால் அங்கு அனைத்தும் சிறப்பே.

**அரசியல் ஆய்வுகள். உலக அரசியல். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வலைத் தளங்கள்**

நாளாந்தம் வாசித்தறிந்த தினசரி செய்திகள், புத்தக வாசிப்பின் மீதான ஈடுபாடு மற்றொன்று. இவற்றோடு பௌதீக ரீதியான தேச வரைபடங்களை அறிந்து கொண்டாலே பாதி செய்திகளை வேறு கோணங்களிலும் தொடர்புபடுத்தலாம். இவை நீண்ட கற்றலின் நீட்சிதான். ஊடகத் தொழிலும் தேடல் கொண்ட வாழ்க்கையும் ஏதோ ஒருவகையில் அனைத்தையும் தொடர்புகொள்ளும். பார்க்கின்ற - கேட்கின்ற விடயங்களை உலக பரப்புக்குள் வைத்து ஆராயும்போதே சில கேள்விகள் எமக்குள் எழுவதை தவிர்க்க முடியாது.

**சமூக சேவைகள் மற்றும் செயற்பாடுகள்?**

பாடசாலை காலங்களிலேயே பல்வேறுபட்ட மாணவர் இயக்கங்கள், இளைஞர் அமைப்புகளில் செயற்பட்டு இருக்கின்றேன். நாடுமுழுவதும் பல தலைமைத்துவ பாசறைகளில் அன்றைய நாட்களில் பங்குபற்றி இருக்கின்றேன். மாவட்ட, தேசிய மற்றும் சர்வதேச சம்மேளன பிரதிநிதியாகவும் செயற்பட்டிருக்கின்றேன். சர்வதேச மாநாடு களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கின்றேன். அதன் தொடர்ச்சிதான் இவை.



'தமிழ் படைப்புகளை ரசிக்கின்ற பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களும் வாழ்கின்றார்கள்'

# மனிதநேயமிக்க எழுத்தாளர் மு.பஷீர்


கம்பஹா மாவட்டத்தின் மினுவாங் கொடை பிரதேசத்தின் கல்லெழுவை எனும் கிராமத்தில் 1940இல் பிறந்த மு.பஷீர் தனது 82ஆவது வயதில் இயற்கை எய்தினார். தி.மு.க, கம்யூனிஸ்ட் கட்சிகளின் பாசறைகளில் வளர்ந்தவர். ஐந்து பெண் பிள்ளைகளுக்கும் ஒரு ஆண்மகனுக்கும் தந்தை. சிறுகதை, கவிதை, ஆய்வு என முத்திரை பதித்துள்ள இவர், நான்கு தசாப்த காலங்களாக வாழ்வின் இடர்களுக்கு மத்தி யில் தொடர்ந்து இலக்கியப் பங்களிப்பு செய்து வருகின்றார். 60களில் எழுத்துலகில் பிரவேசித்து சுமார் நான்கு தசாப்தகாலமாக பயணித்தவர்.

1999ஆம் ஆண்டில் அரசின் கலா பூஷண விருதையும் 2002ஆம் ஆண் டில் கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லா மிய - தமிழ் இலக்கிய மாநாட்டில் சிறந்த படைப்பாளிக்கான விருதையும் பொற் கிழியையும் பெற்றார்.


**எல்.முருகபூபதி அவுஸ்திரேலியா**

நீர்கொழும்பில் கலை, இலக்கி யவாதிகள் இணைந்து இலக்கிய வட்டம் என்ற அமைப்பை 1975 களில் தொடங்கினோம். அதன் தலைவராக இயங்கியவர் எழுத் தாளர் மு.பஷீர். இந்த அமைப்புக்கு முன்னோடியாக எமது இல்லத் தில் 'வளர்மதி நூலகம்' என்ற நூல் நிலையத்தையும் தொடங்கியிருந்தேன். வளர்மதி நூலகம் 1971இல் மக்கள் விடு தலை முன்னணியின் கிளர்ச்சி தொடங் கப்பட்ட காலத்தில் உருவானது. மாலையானதும் ஊரடங்கு உத்தரவு அமுலாகிவிடும். வெளியே செல்ல முடியாது. அக்காலத்தில் தொலைக் காட்சியும் இல்லை. இலக்கிய நண்பர்கள் மத்தியில் நூல்களை பரிமாறிக்கொள்வதற்காகவே வளர்மதி இயங்கியது.

'வளர்மதி' கையெழுத்து சஞ்சி கையும் நடத்தினோம். இக்காலப் பகுதியில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவும் எங்கள் ஊருக்கு வந்து அறிமுகமானார். மல்லிகை நீர்கொழும்பு சிறப்பிதழும் வெளியிட்டோம். முதல் இதழின் வெளியீட்டு விழாவுக்கு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த செல்லையா இராசதுரை தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியின்போது தான் பஷீர் எனக்கு அறிமுகமானார். எனினும், அப்போது நான் இலக்கியப் பிரவேசம் செய்திருக்கவில்லை. பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த







மாநகர சபையின் பொது நூலகத்தில் பஷீரை அவ்வப்போது சந் திப்பேன். அவருக்குத் தெரிந்த தொழில் பீடி சுற்றுவது. அவ ரது வாப்பா கேரளத் திலிருந்து வந்தவர். கேரள இலக்கியங்களில் பரிச்சயம் மிக்கவர். இவர்தான் எனக்கு வைக்கம் முகம் மது பஷீர், தகழி சிவசங்கரன் பிள்ளை, பொற் றேகாட், கேசவதேவ் முதலான கேரள இலக்கியவாதிகளின் படைப்புகளை அறிமுகப்படுத்தியவர்.

எனினும், நாமிருவரும் சந்திக்கும்போது இலக்கியம்தான் பேசுவோம். அவர் மினுவாங்கொடையில் நிரந்தரமாகியபோது, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸில் இணைந்துகொண்டார். அதனால், அந்தக் கட்சியின் பிரசார பீரங்கியானார். அஷ்ரப், ரவூப் ஹக்கீம் ஆகியோரின் நம்பிக்கைக்குரியவரானார். பஷீரின் சிறுகதைத் தொகுதிகளின் வெளியீட்டு நிகழ்வுகளில் இவர்களும் பேசுவார்கள்.

மீறல்கள் (1996) தலைமுறை இடைவெளி (2003) நிஜங்களின் வலி (2005) இது நித்தியம் ( 2013) ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வரவாக்கியிருக்கும் பஷீர், ஈழத்து இலக்கியவாதிகளினால் மிகவும் நேசிக்கப்பட்டவர்; மதிக்கப்பட்டவர். தலைமுறை இடைவெளி எனும் தொகுதியை எமது முகுந்தன் பதிப்பகத்தினால் அவருக்கு வெளி யிட்டுக் கொடுத்தேன். சென்னையில் இலக்கிய நண்பர் செ.கணேசலிங்கன் அதனை அச்சிட்டுத்தந்தார்.

தனது கதைகளுக்கு தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பரிசில்களும் பெற்றவர். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் 'வாழும் கதைகள்' என்ற நிகழ்ச்சியை சில ஆண்டுகள் தொடர்ந்து நடத்தியிருப்பவர். மல்லிகை அட்டைப்பட அதிதியாகவும் கௌரவிக்கப்பட்டவர்.

பஷீர் கடும் சுகவீன முற்றிருப்பதாக அறிந்து கடந்த ஒக் டோபர் மாதம் இலங்கை சென்ற போது, மீண்டும் பார்க் கச்சென்றேன். அப்போது கடும் மழைக்காலம். அதனால், அவருடன் முன்புபோன்று நடைப் பயணம் சாத்திய மில்லை என்பதை தெரிந்துகொண்டே ஒரு மாலைப்பொழுதில் மினுவாங்கொடை கல் லொளுவை கிராமத்தில் அவரது வீட்டைத் தேடிக்கொண்டு சென் றேன். பஷீர், ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறு என் னைக்கண்டதும் எழுந் திருக்கச் சிரமப்பட்டார். அவரை அணைத்து மகிழ்ந்து, அவர் அருகிலேயே அமர்ந்துகொண்டேன். எத்தனையோ கதா மாந்தர்களை உயிரும் சதையும் உணர்வுமாக சித்திரித்து நடமாடவிட்டிருக்கும் இந்த எழுத்துக் கலைஞர், ஒரு கதா மாந்தனாகவே அந்த சாய்வுநாற்காலியில் சாய்ந்திருந்து தனது உடல் உபாதைகள் பற்றி சொல்லத்தொடங்கினார்.

ஊன்றுகோலுடன் நடமாடியவர், சாய்வு நாற்காலியில் தஞ்சமடைந்துவிட்டார். தோப்பில் முகம்மது மீரானின் சாய்வு நாற்காலி நாவலில் வரும் சாய்வு நாற்காலியும் ஒரு முக்கிய பாத்திரம்தான். இன்று, மினுவாங்கொடை கல்லொளுவை கிராமத்தில் இரண்டு கதாபாத்திரங்கள் அவரது வாழ்விலும் எழுதப்படுகின்றன.

**எல். முருகபூபதி- அவுஸ்திரேலியா**




**மெய் நிகர் நினைவேந்தல் அரங்கு**

**மறைந்த மூத்த எழுத்தாளர் மு. பஷீரின் இலக்கியப்பணிகளை நினைவுகூரும் வகையில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இணையவெளி அரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் (இலங்கை நேரம்) இடம்பெற்றது.**

**முகநூல் நேரலையாக எழுத்தாளர் மேமன் கவியின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வின் உரையாளர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், எழுத்தாளர்களான எல்.முருகபூபதி, திக்குவல்லை கமால், முத்துலிங்கம் ஜெயகாந்தன், சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம்.நிலாம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துகளை பகிர்ந்துகொண்டனர்.**



காரைக்கவி

# சீத்துவக்கேடு 139







விளக்கு எண்டதும் எனக்கு எங்கட அப்பரின்ரை ஒரு பாட்டு ஞாபகத்துக்கு வருகுது எண்டு ஆச்சி சொல்லவும், நான் ஆச்சியிட்டை, ''எணெய் அந்தப் பாட்டைச் சொல்லனை'' எண்டதும்

*"இல்லக விளக்கது விருள்கெ டுப்பது*
*சொல்லக விளக்கது சோதி யுள்ளது*
*பல்லக விளக்கது பலருங் காண்பது*
*நல்லக விளக்கது நமச்சி வாயவே"*

எண்டு பாட்டைப் பாடினா.

பாடிப்போட்டு உப்ப நாங்கள் வீட்டில கொளுத்திற விளக்கு இருட்டைப் போக்கும். அதமாதிரி எளிமையான சொல்லுகளை நாங்கள் பாவிக்கிறதால வாற சோதி, அதுதான் விளக்கு நல்ல தெளிவை விளக்கத்தை எல்லாருக்கும் குடுக்கும்.

அதால நாங்கள் எப்பவும் பேசேக்கை சரி, எழுதேக்கை சரி எளிமையான சொல்லுகளைத்தான் பாவிக்க வேணும். அப்பதான் கேக்கிற ஆக்களுக்கு என்ன சொல்லுறம் எண்டு விளங்கும். வாசிக்கிற ஆக்களுக்கு என்ன எழுதி இருக்கிறம் எண்டு விளங்கும் எண்டா.

பிறகு உங்க கனபேர் பெரிய பேச்சாளர் எண்டு பேசுவினம். ஒண்டும் விளங்காது. அதமாதிரி பெரிய எழுத்தாளர், கவிஞர் எண்டிறவை எழுதிறதில ஒரு இழவும் விளங்காது எண்டா.

அதமாதிரி எல்லாரும் பார்க்கக்கூடியதாக இருக்கும். பகலவன் எண்டு சொல்லுற சூரியன் எண்ட விளக்கு எல்லாருக்கும் வழியைக் காட்டும். அதமாதிரி எங்கட நெஞ்சில எப்பவும் நினைக்கிற நமசிவாய எண்ட விளக்கு எம்பெருமானை அடைய உதவும் எண்டு நாலுவிதமான விளக்குகளைப் பற்றி விளக்கமும் சொன்னா.

ஆச்சி உப்பிடி சொல்லவும் அப்பு

*"விளக்கைப் பிளந்து*
*விளக்கினை யேற்றி*
*விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி*
*விளக்கில் விளக்கை விளக்கவல்லார்க்கு*
*விளக்குடையான் கழல் மேவலு மாமே"*

எண்டு திருமூலரும் சில விளக்குகளை பற்றி சொல்லுறார் கண்டியோ எண்டார்.

விளக்கு எண்டால், அறிவு விளக்கப்படுவது (ஒளி) ஞானம். அதாவது, அறிவில் தெளிவு. உங்க கனபேருக்கு அறிவு இருக்கு. ஆனால், ஞானம் கிடையாது. உந்த ஞானம் உள்ள ஆக்களாலைதான் தாங்கள் அறிஞ்ச ஞானத்தை மற்றவைக்கு சொல்ல ஏலும்.

உந்த பாட்டிலை திருமூலர் என்ன சொல்லுறார் எண்டால், ஆரும் என்னவும் விளக்கம் சொல்லி இருப்பினம் கண்டியோ. அந்த விளக்கத்தில இருந்து விலகி உண்மையான விளக்கமான எம்பெருமான் எண்ட விளக்கை எங்களுக்கை கொளுத்தி தூண்டி அந்த விளக்குக்கை எங்கட ஆன்மா எண்ட விளக்கையும் பொருத்தி வைச்சம் எண்டால், எல்லாத்துக்கும் விளக்கமான அந்த இறைவனின் அடிகளை அடையலாம் எண்டார் அப்பு.

உந்த கார்த்திகை திருநாளை நாங்கள் மட்டும் இல்லை கேரளாவிலையும் ஆந்திராவிலையும் கூட கொண்டாடுகினம் எண்டு ஆக்கள் சொல்லுகினம் எண்டு சொன்ன அப்பு, கார்த்திகை மாதம் எண்டது தமிழருக்கு முக்கியமான ஒரு மாதம் எண்டார்.

கார் எண்டும் கார்த்திகை எண்டும் சொல்லுற காந்தள் பூ அளவுக்கு மிஞ்சி பூக்கும். அதோட கார்த்திகை எண்டிற விண்மீன் கூட்டம் கிழக்கு வானத்தில பின்னேரத்தில வாறதும் உந்த கார்த்திகை மாத்ததிலதான் நடக்கும்.

உதாலதான் எங்கட ஆக்கள் உந்த மாதத்துக்கு கார்த்திகை எண்டு பெயர் வைச்சிருக்கிறாங்கள் போல எண்டார் .

உந்த கார்த்திகை நட்சத்திரத்தை பத்துப் பாட்டில ஒண்டான மலைபடுகடாம் ஆஅல் எண்டு சொல்லுது எண்டா ஆச்சி.

*"பெயலொடு வைகிய வியன்கண் இரும்புனத்து*
*அகலிரு விசும்பின் ஆஅல் போல*
*வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை"*

(பாடல் 99-101)

உந்தப் பாட்டில ஆஅல் எண்ட கார்த்திகை மாதத்தில வாற கார்த்திகை எண்ட விண்மீன் கூட்டம் மாதிரி வெள்ளை நிற முசுண்டைப் பூக்கள் பூத்திருந்ததாம் எண்டிறார் பெருங்குன்றூர் பெருங் கொசிகனார் எண்டா ஆச்சி.

**(தொடரும்)**

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

**மேட ராசி அன்பர்களே!**

இவ்வாரம் வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். குடும்பத்தில் இருந்த வீண் பிரச்சினைகள் நீங்கி அமைதி ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே இருந்த மனக்கசப்பு மாறும். விருந்தினர்கள் வருகை இருக்கும். கலைத்துறையினர் எந்தவொரு விஷயத்தையும் தள்ளிப்போடாமல் உடனே முடிவு காண்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கும். திறமை வெளிப்படும்.

**இடப ராசி அன்பர்களே!**

இவ்வாரம் அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை குறைந்து காணப்படும். வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் எதிலும் ஈடுபட்டு வெற்றிபெறுவீர்கள். வரவேண்டிய பணம் வந்துசேரும். செயல் திறமை அதிகரிக்கும். கலைத்துறையினர் அடுத்தவர் ஆச்சரியப்படும் வகையில் சாமர்த்தியமாக காரியங்களை செய்து வெற்றிபெறுவார்கள். உங்கள் செயல்களுக்கு தடைகளை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகிச்செல்வார்கள். மாணவர்கள் தேவையற்ற எண்ணங்களை விட்டுவிட்டு மனதை ஒருமுகப்படுத்தி பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

**மிதுன ராசி அன்பர்களே!**

கூடுதல் கவனத்துடன் செயற்படவேண்டிய வாரமாகும். சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். கணவன் - மனைவிக்கிடையே அனுசரித்து செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். தீ, ஆயுதங்களை கையாளும்போது கவனம் தேவை. கலைத்துறையினருக்கு போட்டிகள் நீங்கும். முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். சாதுரியமான பேச்சால் ஆதாயம் உண்டாகும். மாணவர்கள் ஒரு முறைக்கு இரு முறை பாடங்களை படிப்பது நல்லது.

**கடக ராசி அன்பர்களே!**

இவ்வாரம் விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவரையொருவர் அனுசரித்து செல்வது நல்லது. சகோதரர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசும்போதும் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு மனத்துணிவு அதிகரிக்கும். காரிய வெற்றிக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றிபெற திட்டமிட்டு பாடங்களை படிப்பதும் தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது.

**சிம்ம ராசி அன்பர்களே!**

எதிலும் இலாபம் கிடைக்கும் வாரமாகும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். உத்தியோகத்தர்கள் மிகவும் கவனமுடன் செயற்படுவது நல்லது. மேலிடத்துடன் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் மறையும். கணவன் - மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். கலைத்துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். வீண் அலைச்சலை சந்திக்கவேண்டி இருக்கும். மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும். உற்சாகமாக படிப்பீர்கள். சக மாணவர்களிடம் பழகும்போது கவனம் தேவை.

**கன்னி ராசி அன்பர்களே!**

புத்திசாதூரியமும் அறிவுத் திறனும் அதிகரிக்கும் வாரமாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு நிதானமாக யோசித்து செயற்படுவது நல்லது. பணவரவு திருப்தி தரும். நீண்டநாட்களாக இருந்துவந்த சுணக்க நிலை அடியோடு மாறும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். புதிய ஆர்டர்களுக்கான முயற்சிகள் சாதகமான பலன் தரும். மாணவர்கள் எதிர்கால கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுப்பர். அடுத்தவர் யோசனைகளை கேட்டு தடுமாற்றம் அடையாமல் இருப்பது நல்லது.

**துலா ராசி அன்பர்களே!**

இவ்வாரம் ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். செயல்திறன் அதிகரிக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயற்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்கப் பெறுவர். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். கணவன் - மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்க மனம்விட்டுப் பேசுவது நன்மை தரும். கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் அலைச்சலை சந்திக்கவேண்டி இருக்கும். மாணவர்களுக்கு செயல்திறமை அதிகரிக்கும். உயர்கல்வி கற்பவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

இவ்வாரம் நல்லது, கெட்டது அறிந்து சமயோசிதமாக செயற்படுவீர்கள். வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்துமுடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். கணவன் - மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். எதிர்ப்புகள் குறையும். கலைத்துறையினர் தங்கள் உடைமைகளை கவனமாக பாதுகாத்துக்கொள்வது அவசியம். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சிபெறவும் கூடுதல் மதிப்பெண் பெறவும் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும்.

**தனுசு ராசி அன்பர்களே!**

சாதகமான பலன் கிடைக்கும் வாரம். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த பணம் வந்துசேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். புதிய பொறுப்புகள் ஏற்படலாம். கணவர் - மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்துக்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். மனதில் புதுத்தெம்பும் உற்சாகமும் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் முன் நன்றாக ஆலோசனை நடத்தவும். மாணவர்கள் பாதியில் நிறுத்திய கல்வி தொடர்பான விடயங்களை மீண்டும் தொடர்வர்.

**மகர ராசி அன்பர்களே!**

இவ்வாரம் சாதிக்கும் திறமை அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக தங்களது வேலைகளை செய்வது நல்லது. கணவன், மனைவி அனுசரித்து செல்வதன்மூலம் அமைதி ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதில் தாமதமாகலாம். எதிலும் எச்சரிக்கையாக செயற்படுவது நல்லது. கலைத்துறையினர் தொழில் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். புது ஒப்பந்தங்கள் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துவது வெற்றிக்கு உதவும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

இவ்வாரம் எந்த காரியத்திலும் சாதகமான பலன்பெற வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. காரியங்கள் முடிவதில் தாமதபோக்கு காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர் களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறு பாடு உண்டாகலாம். எனவே, கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளால் திடீர் செலவு உண்டாகலாம். உறவினர்கள் மூலம் நன்மைகள் ஏற்படும். கலைத்துறையினருக்கு கடன் பிரச்சினை தீரும். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் கூடுதல் கவனமும், ஆசிரியர்களிடத்தில் பேசும்போது நிதானமும் தேவை.

**மீன ராசி அன்பர்களே!**

எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும் வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்துமுடித்து பாராட்டு பெறுவர். கணவன் - மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். எதிர்பார்த்த பணம் வரும். கடன் பிரச்சினை தீரும். எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.



# பெருவிரல்

ஐந்து விரல்கள்
ஒற்றைக் கையில்

பெருவிரல்
ஒற்றைக் கையில்
ஒற்றை விரல்

பெருவிரல்
பெரிய விரல்

அது
தனி விரல்

அது
குட்டையான
கட்டை விரல்

பொத்தினால்
மற்ற விரல்களை
மூடிக்கொள்ளும்

விரித்தால்
தனியே நின்றுகொள்ளும்

நீ என்று
சுண்டு விரல்
நீட்டிக் காட்டினால்
மூன்று விரல்களும்
என்னைக் காட்டும்
பெருவிரல் மட்டும்
உன்னையும் காட்டாது
என்னையும் காட்டாது

நான்கு விரல்களும்
பொத்திக்கொள்ள
நிமிர்ந்து நின்று
சிறப்பு என்று சொல்லும்

பெருவிரலே - நீ
தனித்திருந்தாலும்
இணைந்து விடுகிறாய்

தனித்துவமாய்
கடமை புரிகிறாய்

பெருவிரலே - நீ
பெரிய விரல்தான்!

-முஹம்மது பாக்கீ -

# தன்முனைக் கவிதைகள்

நகரும் முட்கள்
மனதை தைக்குது
பொழுதோடு வாவென்ற
அப்பாவின் வார்த்தை

வண்ண பலூன்
விற்கும் வியாபாரி
வாழ்க்கையின் நிறமோ
இன்னும் கறுப்புத்தான்

என் பாடலுக்கு
கைதட்டல் எதற்கு
வயிறு நிறையட்டும்
தட்டை நிறையுங்கள்

குடும்ப குத்துவிளக்காய்
அழகில் ஜொலிக்கிறாள்
சேலை விளம்பரத்தில்
கவர்ச்சி நடிகை

சின்ன மகன்
ஊதித் தள்ளுகிறான்
நகர மறுத்த
காகிதக் கப்பலை

இயந்திர அறுவடை
தவறும் நெற்கதிர்கள்
சிலவேளை உணவாகும்
சேர்த்தெடுக்கும் ஏழைக்கு

முற்றத்தைப் பார்த்துக் கத்தும்
காக்கையிடம் எப்படிச் சொல்வேன்
நானும் இன்று
பட்டினிதான் என்று

நிசப்த இரவொன்றில்
வந்து சென்றாய்
விடிந்ததும் புரிந்தது
எல்லாம் கனவென்று

விலை மதிக்க
முடியாது தவிக்கிறேன்
நீயோ மீளவும்
புன்னகைத்துச் செல்கிறாய்

உணர்ச்சிப் பிழம்பு
வக்கிரம் நிறைந்ததா
சிதைந்து கிடக்கிறாள்
ஏழைச் சிறுமி

அய்ஷத் அப்சத்
பாலமுனை

# நதியும் சேர்ந்ததுதான் கடல்

எனது நதி நேற்றிரவு
கடலில் குதித்து
தற்கொலை புரிந்ததாக
நண்பர்கள் சொல்லி அழுதனர்

அது தற்கொலை புரியவில்லை
கடலில் சங்கமித்ததாக வேறு சிலர்
என்னை ஆற்றுப்படுத்தினர்

உடன் கடலுக்குச்
சென்று பார்க்கிறேன்
இரண்டுமே ஒன்றாக கிடந்து
ஓயாது ஆர்ப்பரிக்கின்றன

புதிதாக பிரசன்னமான நதியை
சுருட்டியெடுத்து
கரைக்குக் கொண்டு செல்வதும்
திரும்பி வருவதுமாக
விளையாடுகின்றன அலைகள்

இதில் எது நதி
எது கடலென்று
பிரித்துப் பார்க்க முடியவில்லை

உண்மையில் நதி
கடலில் சங்கமித்ததா
அன்றி தற்கொலை புரிந்ததா
எனக்கு எதுவுமே புரியவில்லை

ஆனால் இரண்டையுமே
கடலென்றுதான் அழைக்கிறது
காலம்

ஜமீல்

# வானவில்லும் மழை முகிலும்

இரவின் அழகினைப்
படமாக வரைந்திருந்த பல
கடதாசிகளின் பக்கங்களில் எந்த
ஒரு மிருகத்தின் ஆரவாரமும்
கேட்கவில்லை
ஒரு பறவையின் குரலும் கேட்காது
ஏழாவது படம் ஒன்றை வரையும்போது
நடுநிசியில் ஒரு நாய்
ஊளையிட்டுக்கொண்டிருந்தது
அப்போது விடியப் போகின்ற
சைகையை ஒரு சேவலுக்குக்
கொடுப்பதற்காக
வர்ணங்களைக் குழையும்போது
ஓர் எலியின் திடீர் வரவு
கலவைப் பாத்திரத்தைத் தடுக்கிவிட
அங்கே ஒரு வானவில் தரை முழுதும்
காட்சியளித்தது
ஒரு வாளி மழையை நிலமெங்கும் பரவச்
செய்தபின்
நான் வைபரை எடுத்து
தள்ளிக்கொண்டிருந்தேன்
வானவில்லும் மழை முகிலும்
அடுத்தநாள் வானத்தில் நின்றன

டீன் கபூர்

# தூறல்கள்

# சிறை இருக்கிறேன்



உன் புரிதல் வேண்டி
பரிதவித்து நிற்கும்
என் பொழுதுகள்
என் கண்ணீர்
இவை பற்றியெல்லாம்
உன்னிடம்
சொல்வதற்காகவே நிறைய
நினைத்திருப்பேன்
சிறு பார்வை
மௌனம் புதைந்த புன்னகை
மொத்தத்தில் நீ
இப்படி
இருளின் ஆழத்தில்
ஒலித்துக்கொண்டே
இதயம் உருகிக்கொண்டே
ஒரு நிலவினை நேசிப்பவனை
எப்போதாவது சில நொடிகள்
நீயும் நேசிப்பாய் என்று
சிறு நம்பிக்கைக்குள்
சிறை இருந்து கொள்கிறேன்
ஆறுதல் அப்படித்தான்
என்னைத் தழுவிக்கொள்ளும்

எம்.எச்.முஹம்மத்

# நெய்தல்



காலனித்துவத்தின் கீழ் கரையோர
சட்டமூலம் பெரும்பான்மையானது
மசோதா அரசு மானியமாக்கப்பட்டு
அபிவிருத்தி பிரம்மாண்டமாக பிரமிக்கப்பட்டது

மூன்றாம் அலை அடிக்க
அவசரமாக அமுலுக்கு வருவதில்
தீவிரமான திண்ணமானது
அணைக்கட்டும் வலிமையானது

சுதேச மொழியின் சூழ்ச்சி
சூறையாடிய சீனர்களின் எழுச்சி
நிலத்தின் பட்டினியானது வறட்சி
ஊர்வனவற்றை உணவளிக்கும் பயிற்சி

பொருளாதாரத்தின் வரவு இலாபமாகுமா?
உற்பத்தியின் விற்பனை பாவமாகுமா?
உழைக்கும் வர்க்கங்களுடைய சாபமாகுமா?
தொழில் வாய்ப்புக்கள் வரமாகுமா?

அனர்த்தங்களின் அறிகுறிகள்
இன்னமும் கண்டறியப்படவில்லை
இந்து சமுத்திரத்தின் பூர்வீகம்
பறிக்கப்படப் போகுதா என்றறியவில்லை

மபாஸ்

# மாமன் நெஞ்சு பதறுதடி...



தக்கத்திமி ஆடும் மயிலே
தந்தனத்தோம் பாடும் குயிலே
மாமன் நெஞ்சு பதறுதடி
மாமரம் இப்போ காய்களடி

வேலையில புலியும் எண்ணு
உசுப்பேத்தி விட்ட புள்ள
வெளிய போன ஓணான் பிடிச்சு
வேட்டிக்குள்ள விட்ட கதையா
கண்டபாட்டில் தொட்டுப்புட்டன்

ஆறு மாசம் ஆச்சா கண்ணே
நாக்கு தடிச்சு போச்சா பெண்ணே
வாந்தி வந்தா சொன்னா போதும்
மாமன் கையும் இருக்கு புள்ள
தாங்கித் தூக்கிப் போவேன்
மெல்ல

விழாத்தியில பிஞ்சு இல்ல
நெல்லிக்கனி பூக்க இல்ல
மாமன் மனசுலதான் நஞ்சும்
இல்ல
புளிய மரத்திலதான் ஒரு
இலையுமில்ல

நாட்டாம காலத்துல எனக்கு
வந்த சோதனையோ
நாட்டிலே புள்ளத்தாச்சி நான்
ருசிக்க ஒண்ணுமில்ல
புலிபோல வேல செஞ்சு இப்போ
எலி போல ஒழிச்சிருக்க
பொண்டாட்டி கண்ணில் பட்டா
போயிருந்தா என் மூச்சு

வன்னித் தமிழ் மறவன்...
கிளிநொச்சி



# யதார்த்தம்

தவறவிட்ட சந்தர்ப்பங்கள்
மறுதலிக்கப்பட்ட வாய்ப்புகள்
ஏற்றுக்கொள்ளப்படாத நியாயங்கள்
ஏன் என் இருப்புகளே
நினைவில்லா பொழுதுகள்
திருப்பித் தந்த நேசங்கள்
திரும்பவே வராத நேசகர்கள்
பறித்தெடுத்துக்கொண்ட
மகிழ்வின் கணங்கள்
எனக்கென இருந்த
இவ்வாறான
எல்லா துயரங்களையும்
காலவெளிகளில் புதைத்துவிட்டு
எதுவுமே நடக்காதது போல்
முன்னொரு போதும் இதுபோல்
எதிர்கொண்டதேயில்லை
என்பதைப்போல்
புதிய முகத்துடன்
மிக இலகுவாக
மிக யதார்த்தமாக
மிக மிக சாமர்த்தியமாக
மீண்டும் அவ்வாறானதொரு
நிகழ்வுகளுடனேயே
கைகுலுக்க வேண்டியிருக்கிறது

மயிலிறகு மனசு
சிபானா அஸீம்


# தமிழன் தர்பார்



தொகுப்பு:
மணி ஸ்ரீகாந்தன்

இது எங்க ஏரியா

## கனம் நீதிபதி அவர்களே!



ஒரு சின்ன ஊரில் கோர்ட் கேஸ் நடக்குது.
அந்த ஊர்லயே வயசான ஒரு கிழவியை சாட்சியா வச்சு, விசாரிச்சுக்கிட்டிருக்காங்க.

***வக்கீல் :*** பாட்டி உங்கள பத்தி சுருக்கமா சொல்லுங்க.

***பாட்டி :*** என்னை பத்தி சொல்ல என்ன இருக்கு. உன்னைப்பத்தி சொல்லவா? நீ சின்ன வயசுல இந்த ஊர்ல பெரிய களவாணிப் பய . சின்ன சின்ன திருட்டெல்லாம் பண்ணி தப்பிச்சிகிட்டே. அப்புறம் ஒரு நாள் நம்ம ஊரு கோவில் உண்டியலை உடைச்சு நகை பணம் எல்லாம் திருடிட்டே . ஊர் மக்கள் கிட்ட மாட்டாம உன்ன உங்க அப்பன் வெளியூருக்கு கூட்டிகிட்டு போய் படிக்க வச்சான். இன்னிக்கு நீ வக்கீலா இங்க வந்து நிக்கற.

அதிர்ந்து போனார் வக்கீல்...
மெல்ல சமாளிச்சிகிட்டு...

***வக்கீல் :*** “சரி பாட்டி இந்த எதிர்த்தரப்பு வக்கீலை உங்களுக்கு தெரியுமா?” ன்னு கேட்டார்.

***பாட்டி :*** தெரியுமாவா – இந்த மொள்ளமாரி சின்ன வயசுல ஊர் பொண்ணுங்க ஒண்ணை கூட விட்டுவைக்க மாட்டான். சரியான பொம்பளை பொறுக்கி. பஞ்சாயத்து இவனை ஊற விட்டு ஒதுக்கி வச்சுருச்சு. இப்போ என்னமோ கோட்டு போட்டுக்கிட்டு வந்து நிக்கிறான்

***ஜட்ஜ் :*** மேஜையை தட்டி : “அரை மணிநேரம் கழித்து கோர்ட் மீண்டும் கூடும்”ன்னு உத்தரவிட்டுட்டு...
வக்கீல்கள் இருவரையும் தன் அறைக்கு அழைத்தார் .

***ஜட்ஜ் :*** கோர்ட் மறுபடி தொடங்கியதும் நீங்க ரெண்டு பேரும் “இந்த ஜட்ஜ் அய்யாவை தெரியுமா”ன்னு அந்த கிழவி கிட்ட கேட்டீங்கன்னா செருப்பு பிஞ்சுடும்”ன்னு எச்சரிக்கை செய்தார்.


## நீதிடா... நேர்மைடா...



ஒரு செல்வந்தர் தனது பணப்பையை காணவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.
அப்போது ஓர் ஏழை தொழிலாளி தெருவில் கண்டெடுத்ததாக ஒரு பணப்பையை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.
பையை பெற்ற காவல் ஆய்வாளர் செல்வந்தரை அழைத்து பணப்பையை கொடுத்து பணம் சரியாக உள்ளதா என்று பார்த்துக்கொள்ளுமாறு கூறினார்
பணம் சரியாக இருந்தது.
ஆனால், வக்ர புத்தி படைத்த செல்வந்தர், பணம் சரியாக இருப்பதாக கூறினால் தொழிலாளிக்கு ஏதேனும் வெகுமதி தர வேண்டியிருக்குமோ என பயந்து,“ஐயா நான் பையில் 1,60,000 ரூபா வைத்திருந்தேன். தற்போது 1,50,000 ரூபா தான் இதில் இருக்கிறது. இவன்தான் எடுத்திருக்கவேண்டும்” என்றார்.
தொழிலாளி பதறினார்.
“நான் பையிலுள்ள பணத்தை எண்ணக்கூட இல்லை.
அப்படியே கொண்டுவந்தேன்” என்றார்.
காவல் ஆய்வாளர் செல்வந்தரிடம் கூறினார் “அய்யா தங்கள் பையில் 1,60,000 ரூபா இருந்ததாக கூறினீர்கள். ஆனால், இந்த பையில் 1,50,000 ரூபா தான் இருக்கிறது. எனவே, இது நீங்கள் தவற விட்ட பை இது அல்ல. இந்த பைக்கு உரியவரை கண்டுபிடிக்கும்வரை பை தொழிலாளியிடமே இருக்கட்டும். உங்கள் பை கிடைத்ததும் உங்களுக்குத் தெரிவிக்கிறோம். சென்று வாருங்கள்.” என்றார் புன்னகையுடன்.
யாருகிட்ட....



காதல் ஒரு மழை மாதிரி. நனையும் போது சந்தோஷம். நனைந்த பின்பு ஜலதோஷம்.




உனக்கென்ன, உன் தாவணியால் லேசாக உரசி சென்றுவிட்டாய்., நானல்லவா மயங்கி விழுந்துவிட்டேன். துவைத்திருக்கக் கூடாதா உன் தாவணியை

## கடவுள் எங்கே?



ஒரு சிறிய ஊரில் இரண்டு குறும்பான சிறுவர்கள் இருந்தனர். ஊரில் ஏதாவது காணாமல் போனால் இவர்களைத்தான் முதலில் விசாரிப்பார்கள். பெற்றோர்களால் அறிவுரை கூறி அவர்களைத் திருத்த முடியவில்லை. ஒருசமயம் அவ்வூருக்கு ஒரு துறவி வந்தார். பெற்றோர் அவரை அணுகி பையன்களைப் பற்றி கூறி அவர்களை திருத்த வழி கேட்டனர். அவரும் ஒரு பையனை அன்று மாலை தனியாகத் தன்னை பார்க்க அனுப்பிவைக்கச் சொன்னார். ஒரு பையன் அனுப்பப்பட்டான். துறவி அந்தப் பையனை முதலில் ஐந்து நிமிடம் கண்ணை மூடி அமரச்சொன்னார். பின்னர் கேட்டார், தம்பி உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன் நீ பதில் சொல்ல வேண்டும். கடவுள் எங்கே? சொல் கடவுள் எங்கே இருக்கிறார்? அவன் அங்கிருந்து உடனே ஓட்டமாய் ஓடிவந்து வீடு சேர்ந்தான். அடுத்த பையன் அவனிடம் ஓடி வந்ததற்கான காரணம் கேட்டான். அவன் சொன்னான் நாம் பெரிய ஆபத்தில் உள்ளோம். இப்ப கடவுளைக் காணோமாம். அந்த ஆள் என்னைக் கூப்பிட்டு எங்கே எங்கே என்று கேட்கிறான். ஏற்கனவே ஏதாவது காணோம் என்றால் நம் மீதுதான் பழி சொல்வார்கள் இப்போது இந்தப் பிரச்சினையும் நம் தலையில்தான் விழும் போலிருக்கிறது.

## கடி வெடி!




காதலில் எத்தனை முறை தோற்றாலும் பெரிய விஷயமல்ல!
ஒரு முறை ஜெய்த்து பார்த்தால்தான் தெரியும்!
தோல்வி எவ்வளவோ பரவாயில்லை என்று!



என் காதலை அவளிடம் சொன்னேன்.
அவள் சிரித்துக்கொண்டே ஒரே வார்த்தை சொன்னாள்
“நீ ஆயிரத்தில் ஒருவன்!”

யுத்தத்திற்கு தேவையான அளவு ஈட்டி, கேடயம், கத்தி நம்மிடம் இல்லை என்ற ரகசியத்தை வெளியிட்டது யார்?
பழைய இரும்பு வியாபாரிதான் அரசே!





நகர்வலம் போகும்போது எவனோ மன்னர் மீது செருப்பை வீசிவிட்டான்.
அடடா மன்னர் என்ன செய்தார்?
ஓடுவதற்கு பயன்படுமே என்று பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டார்!




## குறும்பா

## பிஞ்சு



வஞ்சகமே இல்லாத
நெஞ்சு
வடிவான உடல்வாகு,
மஞ்சு
அஞ்சுகமே
என்றவளை
அணைத்தவனேன்
பிரிந்தானோ?
இன்றவளின்
வயிற்றினிலே பிஞ்சு!



பாலமுனை பாறூக்










தொலைபேசி இல - 0740107194
அனுப்பவேண்டிய முகவரி : இல.91,
விஜேராம மாவத்தை,
கொழும்பு-07 மின்னஞ்சல் முகவரி:
thamilandharbar@yahoo.com

சமூக வலைத்தளங்களில் நீங்கள் படைக்கும், பகிர்ந்த, படித்துச் சுவைத்த சுவாரஸ்யமான விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அத்தோடு சிரிப்புத் துணுக்குகள், வித்தியாசமான செல்பிகள், புகைப்படங்கள், நச்சுன்னு நாலு வரியில் எழுதப்படும் ஹைக்கூ உள்ளிட்டவற்றையும் எம்மோடு பகிர்ந்துகொண்டால் சிறப்பானதை தெரிவுசெய்து “தமிழன் தர்பார்” பக்கத்தில் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.

# காரிகை களம்

# ஆடைத் தெரிவில் ஐந்து டிப்ஸ்...

பெண்கள் பேஷன் உடைகளை வாங்கி அணிய அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். கடைகளில் அதனை ஆடையாகப் பார்க்கும்போது அழகாக இருக்கும். ஆனால், அவர்கள் அணிந்து பார்க்கும்போது அது எடுபடாமல் போய்விடும். அதற்கு என்ன காரணம்? ஆடைகளைத் தேர்ந்தெடுத்து அணியும்போது பெண்கள் குறிப்பாக ஐந்து தவறுகளை செய்கிறார்கள். அந்த தவறுகள் நிகழாமல் இருந்தால் அவர்கள் ஆடை - அணிகலனில் அபாரமாக ஜொலிப்பார்கள்

### அதிகளவில் ஆபரணம் அணிதல்

வளையல்கள், தமிழ்ப் பண்பாட்டுடன் ஒருங்கிணைந்தவை. பச்சிளம் குழந்தைகள் முதல் முதிய வயது பெண்கள் வரை வளையல்களை அணிந்து கொள்கிறார்கள். பெரும்பாலான பெண்கள் ஆடைகளைத் தேர்வுசெய்யும்போது அவற்றின் நிறத்திற்கேற்ற வண்ணமயமான வளையல்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சிலரோ கைக்கடிகாரம் அணிந்திருக்கும் கையிலும் வளையல்களை அணிகிறார்கள். இது பேஷன் தவறுகளில் முக்கியமானதாகும். வளையல்களை அணியும்போது கைக்கடிகாரம் அணியாமலிருப்பதுதான் சரியானது. ஒருவேளை கைக்கடிகாரம் அணிய விரும்பினால் அந்தக் கையில் கடிகாரத்தை மட்டுமே அணிய வேண்டும். மற்றொரு கையில் வளையல்களை அணிந்து கொள்ளலாம். அதேபோல் உடுத்திருக்கும் ஆடையின் நிறத்திற்கேற்ப அணியும் வளையல்கள் பொருத்தமாக இருக்க வேண்டும். அதிக வளையல்கள் அணிவதும் நல்லதல்ல. அதிக ஆபரணங்கள் அணிவது ஆடைகளின் அழகைக் கெடுப்பதோடு, ஒட்டுமொத்த அழகையும் குன்றச்செய்துவிடும்.

### கூந்தல் அலங்காரம்



பெரும்பாலான பெண்கள் கூந்தல் அலங்காரத்தில் தவறு செய்கிறார்கள். இறப்பர் பேண்ட், பின்கள், ஹெட்பேண்ட் போன்றவற்றை ஒரே சமயத்தில் பயன்படுத்த வேண்டியதில்லை. கூந்தல் அலங்காரப் பொருட்களை அதிகம் பயன்படுத்தினால்தான் பார்க்க அழகாக இருக்கும் என்று நினைப்பது தவறானது. அதில் ஒன்றிரண்டைப் பயன்படுத்தினாலேயே போதுமானது. சில சமயங்களில் சடை பின்னி அலங்காரம் செய்துகொள்ளலாம். அதுவும் அழகான தோற்றத்தைத் தரும். ஒட்டுமொத்த கூந்தல் அலங்காரத்தையும் செய்து முடித்துவிட்டு, ஒருமுறை கண்ணாடியில் பார்த் திருப்தியடைந்த பின்பே வெளியே கிளம்புங்கள்.

மேக்கப்பில் கவனம் தேவை. மேக்கப் போடுவது ஒரு கலை. அழகாக தெரியவேண்டும் என்பதற்காக அனைத்து மேக்கப் வகைகளையும் ஒரே நேரத்தில் முயற்சித்துப் பார்ப்பது அழகைக் கெடுத்துவிடும். ஐ ஷேடோ, லிப் பாம் போன்றவைகளே அன்றாட அலங்காரத்திற்கு போதுமானவை. ஐ லைனர், பிளஷ், ஷிம்மர், லிப் கலர் போன்றவைகளை திருமணம், பிறந்தநாள் போன்ற விசேட தினங்களில் பயன்படுத்தலாம். பேஷியல் மேக்கப் போடும்போது சருமத்திற்கு அதிக அழுத்தம் கொடுக்கக்கூடாது. ஒரு பகுதியில் மேக்கப் போட்டுக்கொண்டிருந்தால் அதனை முழுமைப்படுத்திய பிறகே அடுத்த பகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கண்களுக்கு ஒப்பனை செய்ய விரும்பினால், உதடுகளுக்கு கனமான லிப்ஸ்டிக் ஷேடுகளைத் தவிர்க்கவேண்டும். கண் ஒப்பனைக்கு பயன்படுத்தும் மஸ்காராவும், உதட்டுக்கு உபயோகிக்கும் லிப் பாமும் மிதமாக இருக்கவேண்டும். லிப் லைனர், லிப்ஸ்டிக் ஷேடு போன்றவற்றின் தேர்வில் கவனம் தேவை. இல்லாவிட்டால் முகப் பொலிவு மங்கிவிடும்.



### கனமான நகைகள் அணிதல்

அதிக கனமான மற்றும் அளவுக்கு அதிகமான நகைகளை அணிவதும் பேஷனுக்குப் பொருத்தமாக அமையாது. பல பெண்கள் கனமான நெக்லஸ், காதணிகளை அணிகிறார்கள். குறிப்பாக இளம் பெண்கள்தான் கனமான அணிகலன்களை அணிவதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அணிகலன்களில் அதிக கவனம் செலுத்தும்போது ஆடையின் அழகு குறைந்துபோய்விடுகிறது. வித்தியாசமான உடைகளை விரும்பி அணியும்போது குறைவான எடைகொண்ட தோடுகளை அணிந்தால்போதும்.

### வண்ணங்களின் தேர்வு

அணியும் ஆடையில் அதிக நிறங்கள் இடம் பெற்றிருப்பதும், ஒரே நேரத்தில் பல வண்ண நிறங்களைக் கொண்ட அணிகலன்களை அணிந்து அழகு பார்ப்பதும் பேஷனில் செய்யும் மற்றொரு தவறாகும். சரும நிறத்திற்குப் பொருத்தமான ஆடைகளைத் தேர்வு செய்ய வேண்டும். நகப்பூச்சும் அணியும் ஆடை, சருமத்திற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். வெளியிடங்களுக்கு செல்லும்போது அணியும் உடைக்கேற்ற ஹேண்ட் பேக்கையும் தேர்வு செய்யுங்கள்.

# சர்க்கரை வள்ளிக்கிழங்கு கொழுக்கட்டை



சர்க்கரை வள்ளிக் கிழங்கை விதவிதமாக சமைத்துப் பரிமாறலாம். இன்று சர்க்கரை வள்ளிக்கிழங்கில் சத்தான, சுவையான கொழுக்கட்டை செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

### தேவையான பொருட்கள் :

அரிசி மாவு - அரை கப்
சர்க்கரை வள்ளிக்கிழங்கு - 1
பச்சை மிளகாய் - 1 (நறுக்கவும்)
இஞ்சி - 1 துண்டு (நறுக்கவும்)
மஞ்சள் தூள் - சிறிதளவு
உப்பு, எண்ணெய் - தேவையானளவு
கறிவேப்பிலை, கொத்தமல்லித் தழை - சிறிதளவு
கடுகு, உளுந்தம் பருப்பு - சிறிதளவு
சோம்பு - 1 டீஸ்பூன்

### செய்முறை:

கொத்தமல்லியைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

சர்க்கரை வள்ளிக்கிழங்கை வேகவைத்துத் தோலை நீக்கி நறுக்கிக் கொள்ளவும்.

அரிசி மாவுடன் சிறிதளவு உப்பு சேர்த்து நீரூற்றி கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் ஊற்றி அது சூடானதும் கடுகு, உளுந்தம் பருப்பு, சோம்பு ஆகியவற்றை சேர்த்துத் தாளிக்கவும்.

பின்னர் மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை மற்றும் உப்பு சேர்த்து வதக்கவும்.

அதனைத் தொடர்ந்து சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மஞ்சள் தூள், கொத்தமல்லித் தழை ஆகியவற்றை சேர்த்துக் கிளறி இறக்கவும். இதனை சூரணமாக வைத்துக்கொள்ளவும்.

சிறிதளவு பிசைந்து வைத்த அரிசி மாவை எடுத்து கிண்ணம் போல் செய்து நடுவில் சூரணத்தை வைத்து விரும்பிய வடிவில் கொழுக்கட்டையாக்கி, வேகவைத்து சாப்பிடவும்.

# கண்ணாடித் தழும்புக்கு வீட்டு வைத்தியம்

இன்றைய விஞ்ஞான யுகத்தில் பெரும்பாலான வேலைகள் கணினி சார்ந்த டிஜிட்டல் திரைகளின் வழியாகவே நடக்கின்றன. இது தவிர பெரும்பாலானோர் தங்கள் பொழுதுபோக்குகளுக்கு இணையத்தளங்களையே சார்ந்திருக்கிறார்கள். அதனால் டிஜிட்டல் சாதனங்களின் பயன்பாடு மிகவும் அதிகரித்துவிட்டது. அவற்றை நீண்ட நேரம் பயன்படுத்துவது கண் சார்ந்த பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. இதனால் கண்ணாடிகள் அணிவதும் தவிர்க்க முடியாததாகி விட்டது. அப்படி கண்ணாடி அணிபவர்களின் மூக்குப் பகுதியில் பிரேம்கள் அழுத்தமாகப் பதிவதால் தழும்புகளும், வடுக்களும் ஏற்படுகின்றன. அத்தகைய பாதிப்புகள் ஏற்படாமல் தடுப்பதற்கு கற்றாழையைப் பயன்படுத்தலாம்.

கற்றாழையின் தோல் பகுதியை நீக்கி ஜெல்லை எடுத்து வடுக்கள் ஏற்பட்டிருக்கும் பகுதியில் அழுத்தமாகத் தேய்த்து அரை மணிநேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி வரலாம்.



மேலும், உருளைக்கிழங்கு சாற்றையும் பயன்படுத்தலாம். அதிலிருக்கும் 'கேடகோலேஸ்' எனும் நொதி சருமத்தை பிரகாசமாக்கவும், கருமையான புள்ளிகளை அகற்றவும் உதவுகிறது. உருளைக்கிழங்கை நறுக்கி மிக்சியில் அரைத்து அதன் சாற்றை பஞ்சில் முக்கி தழும்புகள் ஏற்பட்டிருக்கும் பகுதியில் தடவ வேண்டும். இவ்வாறு வாரத்திற்கு நான்கு முறை செய்து வந்தால் விரைவில் தழும்புகள் மறையத் தொடங்கும்.

இதேவேளை, வெள்ளரிக்காயும் தழும்புகள் மறைவதற்கு உதவும். அதனை மெல்லிய துண்டுகளாக நறுக்கி வடுக்கள் இருக்கும் பகுதியில் வைத்து 30 நிமிடங்கள் கழித்து எடுத்து குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும்.

எலுமிச்சை சாற்றிலுள்ள 'ஆன்டி ஆக்சிடெண்டு'கள் வடுக்களை நீக்கும் தன்மை கொண்டவை. அதனுடன் சிறிதளவு தேன் சேர்த்து மூக்குப் பகுதியைச் சுற்றி அழுத்தமாகத் தடவ வேண்டும். அப்போது மூக்குப் பகுதியில் குளிர்ச்சித் தன்மையை உணர முடியும். குளிர்ச்சி நீங்கியதும் முகத்தைக் கழுவி விடலாம்.

# ஆவாரம் பூவே...



ஆவாரம் பூ சருமத்திற்கு மினுமினுப்பைக் கொடுக்கும். தோல் வறட்சியை சரி செய்யும்.

உடலில் ஏற்படும் துர்நாற்றம் நீங்க ஆவாரம் பூவை அரைத்துப் பூசிக் குளித்து வரலாம்.

ஆவாரம் பூக்களை எடுத்து ரோஜா இதழ், எலுமிச்சை தோல், கஸ்தூரி மஞ்சள், பச்சைப் பயறு சேர்த்து அரைத்துக் குளிக்கும் போது பயன்படுத்தி வந்தால் தோலில் ஏற்படும் அரிப்பு, நமைச்சல் ஆகியவை சீக்கிரமே குணமாகும். கருந்திட்டுக்கள், கரும்புள்ளிகள், முகத்தில் ஏற்படும் சுருக்கம் போன்றவை நீங்கும்.

ஆவாரம் பூவை நிழலில் காய வைத்து டப்பாவில் சேகரித்து எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பசுமையான ஆவாரம் பூக்கள் அல்லது காய வைத்த பூவின் பொடியை ஒரு ஸ்பூன் அளவு எடுத்து தயிரில் கலந்து முகத்தில் பூசி வந்தால் முகத்தில் இருக்கும் வடுக்கள் நீங்கும். முகத்தில் எண்ணெய் வடியும் பிரச்சினை இருப்பவர்களுக்கு அது நீங்கி முகம் அழகும், பளபளப்பும் பெறும்.

ஆவாரம் பூவின் பொடியைப் பயன்படுத்தி தொடர்ந்து குளித்து வந்தால் உடலில் ஏற்படும் வியர்வை துர்நாற்றம் நீங்கும்.

# ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் என்றால் என்ன?

## இறுதி இடத்தில் தடுமாறும் இலங்கை அணி!



### இலங்கை அணிக்கு இன்னும் 18 போட்டிகள்

### 6 அணிகளுடன் பலப்பரீட்சை

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 13ஆவது தொடரானது எதிர்வரும் 2023ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ளது. கிரிக்கெட் விளையாடுகின்ற ஒவ்வொரு அணியினதும் கனவாக இருப்பது, ஐ.சி.சி. உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதேயாகும்.

இறுதியாக கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.சி.சி. உலகக் கிண்ணத் தொடரில் கிரிக்கெட் விளையாட்டைக் கண்டுபிடித்த இங்கிலாந்து முதல் தடவையாக சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டது.

ஒரு உலகக்கிண்ணத் தொடரில் நேரடியாக விளையாடும் அணிகளை தெரிவுசெய்வதற்காக சர்வதேச கிரிக்கெட் பேரவையானது முன்னதாக, ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியை வைத்து ஒருநாள் அணிகளினுடைய தரவரிசையில் முதல் 8 இடங்களுக்குள் வருகின்ற அணிகளுக்கு வாய்ப்பு வழங்கி வந்தது. ஆனால், 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ணத் கிரிக்கெட் தொடரில் அணிகளை தெரிவுசெய்யும் முறையானது சற்று வித்தியாசமானதாகும்.

கடந்த மூன்று வருட காலப்பகுதிக்குள் பலம் வாய்ந்த அணிகள் என நிரூபிக்கின்ற அணிகளுக்கு மாத்திரம், உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறலாம் என்ற அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் பேரவையானது புதிதாக ஐ.சி.சி. உலகக் கிண்ண சுப்பர்லீக் என்ற ஒரு தொடரை கடந்த 2020 இல் அறிமுகம் செய்தது.

**ஐ.சி.சி. உலகக் கிண்ண சுப்பர்லீக் என்றால் என்ன ?**

2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்காக 13 அணிகள் தெரிவுசெய்யப்படுவதுடன், அவை மொத்தம் 24 போட்டிகளில் விளையாடும். இப்போட்டிகளின் நிறைவில் புள்ளிப்பட்டியலில் முதல் 8 இடங்களை பிடிக்கும் அணிகள் நேரடியாகத் தகுதி பெறும். இதில் போட்டியை நடத்துகின்ற இந்தியா நேரடியாகத் தகுதி பெறும். அந்த வகையில் இந்திய அணியானது 2023 உலகக்கிண்ண தொடரில் விளையாடக் கூடிய முதல் அணியாக தெரிவாகியுள்ளது.

எனவே, இன்னும் 7 அணிகளை தெரிவு செய்வதற்காக தான் தற்போது ஐ.சி.சி உலகக் கிண்ண சுப்பர்லீக் என்ற ஒரு தொடர் நடைபெற்று வருகிறது. இத்தொடரைப் பொறுத்தவரையில் ஒரு அணி, 8 அணிகளுடன் தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரில் விளையாடும்.

மொத்தமான 24 போட்டிகளில், 12 போட்டிகள் சொந்த நாட்டில் நடைபெறுகின்ற போட்டிகளாகவும், இன்னும் 12 போட்டிகள் வெளிநாடுகளில் நடைபெறுகின்ற போட்டிகளாகவும் அமைந்திருக்கும்.

2023 ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் மொத்தமாக 10 அணிகள் பங்கேற்கின்றன. இதில் இந்திய அணி நேரடியாகத் தகுதி பெற்றுவிட்டது. இன்னும் 7 அணிகள் உலகக்கிண்ண சுப்பர்லீக் தொடரின் அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ளன. மேலும் எஞ்சிய 2 அணிகள் தகுதிகாண் போட்டிகள் மூலமாக தெரிவுசெய்யப்பட



வுள்ளன.

தகுதிகாண் போட்டிகள் 2023ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் திகதி முதல் ஜூலை 9ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சிம்பாப்வேயில் நடைபெறவுள்ளன. இது ஒரு பக்கம் இருக்கின்ற நிலையில், இலங்கை அணியினுடைய நிலைப்பாடு தான் தற்போது மிக மிக மோசமாக காணப்படுகிறது. 1996ஆம் ஆண்டு ஐ.சி.சி. உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய இலங்கை அணி பின்னர் 2014ஆம் ஆண்டு ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

2015ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் வளர்ச்சி குறைந்து கொண்டே வருகிறது. தற்போது நடைபெற்று வருகின்ற ஐ.சி.சி. உலகக் கிண்ண சுப்பர்லீக் தொடரின் புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி இறுதி (13 ஆவது) இடத்தில் காணப்படுகிறது. குமார் சங்கக்கார, முத்தையா முரளிதரன், சனத் ஜெயசூரிய, மஹேல ஜெயவர்தன, திலகரத்ன டில்ஷான் போன்ற ஜாம்பவான்களை உருவாக்கிய இலங்கை அணி தற்போது இவ்வாறு படுமோசமான நிலையில் காணப்படுகின்றமை ரசிகர்களிடத்தில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அணியின் தலைமையும் தற்போது நிலையாக இல்லை. திடீர் மாற்றங்கள் ஏற்பட்டே வருகின்றன. உலகக்கிண்ண சுப்பர்லீக் தொடரில் ஒரு அணிக்கு மொத்தமாக 24 போட்டிகள் காணப்படும் நிலையில், இலங்கை அணி தற்போது 6 போட்டிகளில் விளையாடியுள்ளது. இன்னும் 18 போட்டிகள் எஞ்சியிருக்கின்றன. அதாவது இலங்கை அணி இன்னும் 6 அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. அடுத்ததாக இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்யும் இலங்கை அணி, பின்னர் இந்தியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் சிம்பாப்வே ஆகிய அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

இந்த அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தி முதல் 7 இடங்களுக்குள் வருகின்ற பட்சத்தில் மாத்திரமே இலங்கை அணியால் 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக் கிண்ண தொடருக்கு நேரடியாகத் தகுதி பெற முடியும். அது தவறவிடப்படுகின்ற பட்சத்தில் தகுதிகாண் போட்டிகளில் விளையாடி அதில் முதல் இரண்டு இடங்களுக்குள் வந்தால் மாத்திரமே உலகக்கிண்ணத் தொடரில் விளையாடக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

சுருக்கமாக சொல்லப்போனால் 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில், தற்போது நடைபெறும் உலகக்கிண்ண சுப்பர்லீக் தொடரில் விளையாடும் 13 அணிகளில் மூன்று அணிகள் 2023 உலகக்கிண்ணத் தொடரில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழக்கும். எனவே, இலங்கை அணி எதிர்வருகின்ற போட்டிகளை எவ்வாறு எதிர்த்தாடப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

**ஏ. அகீல் சிஹாப்**

---

## நான் வானவில் ஷில்பா ஷெட்டி



பட வாய்ப்புக்களுக் காகவும், பலரின் கவனத்தையும் ஈர்ப்பதற்காகவும் இளம் நடிகைகள் தான் கவர்ச்சி ஃபோட்டோஷுட் நடத்துகிறார் கள் என்றால், புகழின் உச்சியை தொட்டு, கனவு கன்னிகளாக வலம் வந்தவர் களும் கலர்ஃபுல் ஃபோட் டோஷுட் நடத்தி பலரையும் கிறங்கடித்து வருகின்றனர்.

1990 களிலும், 2000 லும் பொலிவூட், கோலி வூட், டோலிவூட் என பல மொழிகளில் ரசிகர் களின் கனவு கன்னி களாக இருந்த ஷில்பா செஷட்டி, மாதுரி தீட் ஷித்தும் தற்போது ஃபோட் டோக்களால் சமூக வலை தளங்களை கிறங்கடித்து வருகின்றனர்.

கட்டியிருப்பது புடவை தானா அல்லது வேறு ஏதா வது உடையா என பார்ப் பவர்களை வியக்க வைக் கும் வகையில் ஷில்பா ஷெட்டி, பல வண்ணங் கள் கலந்த உடையில் ஸ்டைலான ஃபோட் டோஷுட்டை நடத்தி இருந்தார். இந்த ஃபோட்டோக்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட் டதுடன், நான் தனியான வண்ணமில்லை, பல வண் ணங்கள் கலந்த வான வில் என பதிவிட்டுள்ளார் ஷில்பா.

## 5 படங்களில் நடிக்கும் சிவகார்த்திகேயன்



**‘டாக்டர்’, ‘அயலான்’, ‘டான்’ ஆகிய படங்களை தொடர்ந்து நடிகர் சிவகார்த்திகேயன், ஒரே நிறுவனத்தின் 5 படங்களில் நடிக்க இருப்பதாக தகவல் கள் வெளியாகியுள்ளது.**

**தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் சிவகார்த்திகேயன். இவர் நடிப்பில் தற்போது டாக்டர், அயலான், டான் ஆகிய படங்கள் உருவாகி வருகிறது.**


**இந்த நிலையில் சன் பிக்சர்ஸ் நிறுவனத்துக்கு தொடர்ச்சியாக 5 படங்களில் நடிக்க சிவகார்த்தி கேயன் ஒப்புக் கொண்டுள்ளதாகவும், ஐந்து படங்களுக்கும் சேர்த்து ரூபாய் 75 கோடி அவருக்கு சம்பளமாக பேசப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.**

**சன் பிக்சர்ஸ் நிறுவனம் தற்போது ’அண்ணாத்த’, ’தளபதி 65’, சூர்யா 40 ஆகிய படங்களை தயாரித்து வருகிறது.**

## ஆதிவாசி குடும்பங்களுக்கு ராணா உதவி

கடந்த வருடம் பரவ ஆரம்பித்த கொரோனா தாக்கம், தற்போது இரண்டாவது அலையாக உருமாறி அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை அசைத்துப் பார்த்திருக்கிறது. இந்த நிலையில் திரையுலக பிரபலங்கள் பலர் கடந்த வருடமும் சரி, இந்த வருடமும் சரி தங்களால் இயன்ற உதவிகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்து வருகின்றனர்.

அந்தவகையில் நடிகர் ராணா, தெலங்கானா வின் வடக்கு பகுதியில் உள்ள நிர்மல் என்கிற மாவட்டத்தை சேர்ந்த 400 ஆதிவாசி குடும்பங்களுக்கு அவர்களுக்கு தேவையான மளிகை, உணவுப் பொருள், மருத்துவ பொருட்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளார். தற்போது ‘விராட பர்வம்’ என்கிற படத்தில் வனத்துறை அதிகாரியாக நடித்துள்ள ராணா, அந்த படப்பிடிப்பின்போது அந்த பகுதியில் உள்ள ஆதிவாசி மக்களுடன் நெருங்கி பழகியவர் என்பதால் அவர்களின் தேவையறிந்து, இந்த உதவியை செய்துள்ளார் என கூறப்படுகிறது.



## ஜான்வியை துரத்தும் தெலுங்கு தயாரிப்பாளர்கள்

**மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் மூத்த மகள் ஜான்வி கதாநாயகியாக அறிமுகமாகி மூன்று ஆண்டுகள் ஆகப் போகிறது. பிரபலமடைந்துவிட்டாலும் இன்னமும் ஹிந்தியில் முன்னணி கதாநாயகியாக அவரால் முன்னேற முடியவில்லை என்பதுதான் உண்மை.**

**ஸ்ரீதேவி தென்னிந்திய மொழிப் படங்களில் நடித்து இங்கு பிரபல மான பின்புதான் மும்பைக்குச் சென்று அங்கு பிரபலமாகி நம்பர் 1 இடத்தைப் பிடித்தார். ஹிந்தியில் இன்னும் பெரிய அள வில் பேசப்படாத ஜான்வியை எப்படியாவது தெலுங்கில் அறிமுகப்படுத்திட வேண்டும் என தெலுங்குத் தயாரிப்பாளர்கள் விடாமல் முயற்சித்து வருகிறார்கள்.**

**தற்போது ஒரே சமயத்தில் மூன்று தயாரிப்பு நிறுவனங்கள் அவரைத் தொடர்பு கொண்டு பேசி வருகிறார்களாம். மகேஷ் பாபு, ராம் சரண் ஆகியோரது படங்களும் அதில் அடக்கம்.**

**தென்னிந்திய மொழிகளில் அறிமுகமானால் ஹிந்தியில் ஓரம் கட்டப்பட்டு விடுவோமோ என ஜான்வி யோசிக்கிறார் போலிருக்கிறது. எப்படி யாவது அவருக்கு அதிக சம்பளம் கொடுத்தாவது தங் களது படங்களில் நடிக் கவைத்துவிட வேண்டும் என தயாரிப்பாளர்கள் போட்டி போடுகிறார்களாம்.**

